சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VII, தொகுதி-எ. | JUNE & JULY 1912. ஜூன், ஜூலை௴ 1912. | NO. 11-12. பகுதி ௰க-௰உ

பக்தி.

தாம் விருப்பு வெறுப்பு முதலியவற்றின் வசப்பட்டுப் பல வகையாய துன்பங்களை யடைந்து வருவதை நன்குணர்ந்தவர்கள், அவற்றினின்றும் நீங்கமுயன்று, அதற் கேதுவாய சாதனங்களை மேற்கொண் டொழுகுவாரென்பது நுண்ணுணர் வுடையா ரியாவர்க்கும் நன்கு விளங்கிய விஷயமாம். விருப்பு முதலியவற்றின் வசப்பட்டுத் துன்பமடைவதினின்றும் நீங்குமார்க்கத்தை யுண்மைபாக நோக்குமிடத்து, அது தத்துஞானமேயாம். அத்தத்துவஞானம் (மெய்ஞ்ஞானம்) பக்தியில்லாதவர்க்குச் சித்திப்பதொருவகையானு மின்றாகலின், பூரணமான பத்தியுடையார்க்கே தத்துவஞான வாயிலாகத் துன்பங்கள், தம் காரணத்தோடு (அவிச்சையோடு) நீங்குவனவாம்.

ஏரியிலுள்ள ஜலம் மதகின்வாயிலாக வெளிப்பட்டு, வாய்க்கால் வழியாகவோடி விளை நிலத்திற் பாய்ந்து, அதனாகார (வடிவ) மாவதுபோன்று மனம் பத்திமான்களது சேவையின் வாயிலாகச் சாந்தமடைந்து, அவரது உபதேச வழியாகச் சென்று பகவானிடத்துச் சென்று, அப்பகவானது ஆகாரமாதலே பத்தியாம். அஃதாவது இடைவிடாது எனக்கெனச் செயலொன்று மில்லை; ஆண்டவனே! யானுன்னுடைய வுடைமை; என்னை எவ்வாற்றாலேனும் துன்பத்தின் தொடர்பில்லா திருக்கச் செய்யவேண்டுமென்று பகவானைப் பூரணவிசுவாசத்தோடு சிந்தனை செய்திருத்தலாம். தேகத்தி னிலைமையையும், பொருள்களி னிலைமையையும், நன்கு கருதா திருப்பவர் கருணாகரக்கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவது கூடாமையின், தேகத்தி னிலைமையையும் பொருள்களி னிலைமையையும் விரைந்தெண்ணிக் கடவுளையடைய முயலுதல் அத்தியாவசியகமாம்.

பகவான் பகவத்கீதையில் (12-6-7 ல்) "யாவர் கருமங்களெல்லா வற்றையும் என்னிடத் தர்ப்பணஞ்செய்து, என்னைச் சரணமாக வடைந்து, ஒரேவிதமான பக்தியோகத்தினால் என்னைத் தியான வுபாசனைகள் செய்திருக் கின்றாரோ ஏகாந்த பத்தியுடைய அவரை அருச்சுனா! யான் (ஜனன) மரண சமுத்திரத்தினின்றும் விரைவாகக் கரையேற்றுகின்றேன்" என்றருளியிருத்தலை நோக்குமிடத்து, பரமேசனை நமக்குத்தக்க துணையாம்; அவனை மனம் வாக்குக்காய மென்னும் திரிகரணமு மொத்துவரப்பத்தி செய்தல் வேண்டு மென்பதுசெப்பமாக விளங்குவதாம்.

"கந்தநன் மலர்கொடு காய பூசனை
வந்தனை செயல்புகழ் வாக்கின் பூசனை
பந்தனை யறமனம் பத்தி யாற்செயுஞ்
சிந்தனை நியதமுஞ் சிவன்றன் பூசையே".

என்றீசுவரகீதை கூறியவாறு பரமேசனை மனம் வாக்குக் காயங்க ளொத்துவரப் பத்தி செய்தல் வேண்டும்.

1. சுகந்தமலர் முதலியவற்றைக் கொண்டு பரமேசுவரனை யாராதித்தல் காயபக்தியாம்.

2. அன்பாகத்துறையும் ஆநந்தத்தேனே! இன்பக்கடலா மெம் பெருமானே! என்று துதிப்பது வாக்பத்தியாம்.

3. ஈசனை யிடைவிடாது சிந்தித்தல் மனோபத்தியாம்.

இம்மூவகைப் பத்தியையும் முறையறிந்து செய்பவர் எத் துயருமற் றிலங்குவாராவர். நாமோ இம்மூவகைப் பக்தியு ளொன்றையும் பூரணமாகச் செய்வதில்லை; காலத்தை வீணாகக் கழித்துக் கடையாகின்றோம். பரமேசுவரன் ஓரளவிற் கடங்காத அகண்ட சொரூபனாகவிருத்தலின், அவனை பக்தியாலன்றி வேறெதனாலும் அளவுபடுத்தியறிதல் ஒருபோது முடியாததாம். இதுபற்றித்தான் மாணிக்கவாசகர் "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்று கூறியருளினர். காயத்தால் வணங்குதலும் வாக்கால் துதித்தலும், மனத்தால் தியானஞ்செய்தலுமாகிய பக்தியைப் பிறர் மதிப்பதற்காகவன்றிப் பூரண விசுவாசத்தோடு செய்பவர் உண்மையாக ஒரு துயருமடைவதில்லையாம். பத்தியின் மிகுதிப்பாட்டாலன்றோ சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பரமசிவன் தூதுவனாகவுஞ் சென்றார்.

துரியோதனனிடத்துக் கண்ணபிரான் தாம் தூதுபோகும் விஷயமாகச் சகாதேவனை யபிப்பிராயங் கேட்டபோது, சகாதேவன் அர்ச்சுனனைக் கொன்று, கர்ணனுக்குப் பட்டங்கட்டி, துரோபதைக்கு மொட்டையடித்துக் காலில்விலங்கிட்டு, நின்னை நேராகப் பிடித்துக் கட்டிவிட்டால் பாரதப்போர் நடவாதென்று கூறினன். அதுகேட்டுப் பகவான் அர்ச்சுனனைக் கொல்லுதலும், கர்ணனுக்குப் பட்டங்கட்டுதலும், துரோபதைக்கு மொட்டையடித்து விலங்கிடுதலும் ஒருவாற்றாற் கூடினுங் கூடும்; என்னைக் கைப்பிடியாகப் பிடித்துக்கட்டுதல் கூடுமோ என்று கூறினர். அதற்குச் சகாதேவன் தேவரீரை கைப்பிடியாகப்பிடித்துக்கட்டுதல் எனக்கு மிகு வெளிதா மென்றான். அங்ஙனமாயின், என்னைப்பிடி பார்க்கலாமென்று கூறிப் பகவான் பதினாயிரம் வடிவங்கொண்டு நின்றனர். அப்பதினாயிரவடிவங்களையும் சகாதேவன் கண்டு இம்மாயா வடிவங்களால் நமக்காவதுயாது, ஒன்று மின்றென்று தீரத்தெளிந்து, ஆதிபரஞ் சோதியின் அரவிந்தவடிகளைத் தன் மனத்தாமரைமலரின்கணிருக்கும் விதமாகப் பாவித்திடைவிடாது தியானஞ் செய்வானானன். அதுகண்டு பகவான் அன்பனே! நீ என்னையுள்ளவாறு கண்டுபிடித்துக் கட்டினாய்; உனக்கு வேண்டுவது யாது? தருகிறேன் என்று கூறினரென்று பாரதம் உத்தியோக பருவத்தில் கூறியுள்ளதை நோக்குமிடத்து, பகவான் பத்தியாலன்றி வேறெதனாலும் வசப்படுத்தற் குரியனாகானென்பது செவ்விதாக விளங்குவதாம். மாணிக்கவாசகர் "எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே" என்று கூறியது மிங்கு நுனித்து நோக்குதற் குரியதாம்.

கனலொடுபுகையும் குடையொடு நிழலும் போல மனமும் வாக்கும் காயமும் ஒத்திருக்கப் பக்திசெய்ய முயலுதல்வேண்டும். பத்திசெய்யாதவர் முத்தியடைதல் எத்திறத்தானு மில்லையாம். சூரியனை யொருசிறிய கண்ணாடியுள் பிரதிபிம்பிக்கச் செய்வது போலப் பரமேசுவரனை யன்போடு கூடிய மனத்துள் எழுந்தருளச் செய்யலாம். பகவான் எழுந்தருளியுள்ள விடங்களுள் ஆசை கோபம் அகந்தை முதலியன வொழிந்தமனமே மிகு சிரேஷ்டமுடையதாமென்று சான்றோரால் சொல்லப்படுதலின், நாம் கூடுமானவரையில் ஆசை கோபமுதலியவற்றை யொழிக்க முயலுதல் வேண்டும். உயிர்கள் நன்மை யென்பனவற்றையெல்லா மடைதற் பொருட்டு,

காலதேசநிமித்தங்கட்கேற்றவாறு பற்பல வடிவங்கொண்டு விளங்கும் பகவானைப் பத்தி வலையாற்பிணித்து, அவனருளுக்குப் பாத்திரமாதலே மக்களாகப் பிறந்தவர்களுள் முக்கியமானவரது கடமையாம்.

விருப்பமென்பதொன்றே ஒவ்வொரு நிமித்தம் பற்றி ஆசையென்றும், சிரத்தையென்றும், இச்சையென்றும், பக்தியென்றும் சொல்லப் படுகின்றது.

1. வீடு, மனை, விளைநில முதலியவற்றின் மீதுள்ள விருப்பம் ஆசையாம்.

2. எடுத்துக்கொண்ட காரியத்தை யிடையூறின்றி முடிக்க வேண்டுமென்னும் விருப்பம் சிரத்தையாம்.

3. கிடைப்பதற் கரியபொருளை யடையவேண்டுமென்னும் விருப்பம் இச்சையாம்.

4. குருவினிடத்தும் ஈசனிடத்துமுள்ள விருப்பம் பத்தியாம். இந்நான்களுள் முன்னுள்ளவை துக்கசாதனமாகவும், பின்னுள்ளது துக்கநிவிர்த்தி சாதனமாகவுமிருத்தலின், துக்கநிவிர்த்திசாதனமான பத்தியை முத்தியுற அத்தியாவசியகமாகப் பெற நாம் முயலுதல் வேண்டும். ஆசை, சிரத்தை, இச்சை யென்பன பத்திக்கேதுவாக விருப்பின், அவை தள்ளத்தக்கனவன்றாம். குருவினிடத்தும், ஈசனிடத்தும் பக்தியில்லாதவர் ஞானசாஸ்திரங்களின் பொருளையுள்ளவாறறிதலும், சற்குரு கூறியவா ெறாழுகுதலும் இன்மையின், அவர் விருப்பு வெறுப்பு முதலியவற்றின் வசப்பட்டுத்துன்பமடைவது தவறுவதே யில்லையாம். உயிர்கள் நன்னெறி கண்டுய்ய வுலகைப்படைத்த பரமேசுவரனிடத்தும்,தத்துவஞான வாயிலாக முத்தியையடைய உபதேசிக்குஞ் சற்குரு மூர்த்தியிடத்தும் நிரம்பிய பக்தியுடையவரிடத்துப் பிராணிகளைக் கொல்லாமை, உயிர்களிடத்துக்கருணை, பிறர் நிந்தித்துக் கூறியவற்றைப் பொறுத்துக்கொள்ளுதல், சற்குருமூர்த்தி யுபதேசித்ததையிடைவிடாது சிந்தித்தல், தமக்கும் பிறர்க்கும் நன்மைதருதற் கேதுவாயவற்றைப் பேசுதல், சாந்தம், இந்திரிய நிக்கிரகம் முதலிய குணங்கள் மாறாதிருப்பனவாம். இவையுடையாரே யுண்மையான பத்தியுடையாராவர். பொய்,கொலை,களவு,முதலியவற்றைப் பூரணமாக வுடையவர் ஒருவாற்றானும் பக்திசெய்து முத்திபெறுதற் குரியவ ராகார்.

நாம் பக்தியென்னும் பாக்கியத்தைப் பெறுமையாற்றன், சித்தஞ் சிதைதற் கேதுவான தீவினைகளைச் செய்வதற்குச் சிறிது மஞ்சாதிருக்கின்றோம். இனியேனும் நாம் பூச்சிய (பூசிக்கத்தக்க) புத்தியோடு பரமேசனையும், அவனது பிரதிநிதிவடிவமான சற்குருமூர்த்தியையும் பாங்காகப் பூசிக்கும் பக்தியைப்பெற்றுப் பரமாநந்த நிலையைப்பெற முயலுவோமாக.

சூடாலை.

முதலங்கம்.

மூன்றுங் காட்சி.

இடம்—மாளவதேசத்து அரசனது அந்தப்புரம்.

பாத்திரங்கள்—சிகித்துவஜன்-சூடாலை-பத்மாவதி.
காலம்-இரவு.

பத்மாவதியும் சூடாலையும் சிகித்துவஜனது சோர்வைக்கண்டு தம்முட் பேசிக்கொள்ளுகின்றனர்.

பதமாவதி:—அம்மணி! நமது மகாராஜா முகப் பொலிவின்றி வருகின்றாரே அதற்குக்காரணம் யாது? ஒருநாளும் நான் மகாராஜா இவ்வாறு சோர்வுற்று வரக்கண்டதில்லை; தயவு செய்து தெரிவிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

சூடாலை:—தோழி! பத்மாவதி! மகாராஜா அவர்கள் இன்று மாலை வழக்கம்போல என்னை நந்தவனத்திற்கு வருமாறழைத்தனர்; நான் வேதாந்தவிஷயமாகச் சிலபேசி, நந்தவனத்திற்குக் கூடப்போகாது விட்டேன்; அதுதான் அவர் சோர்வாக வருதற்குக் காரணமா யிருக்கலாமென்று நினைக்கின்றேன்.

பத்:—அம்மணி! மகாராஜாஎன்னை நோக்கி வருமாறு குறிப்பிடுகின்றார்; தாங்களும் வரக்கூடுமானால் வாருங்கள்.

சூடா:—பத்மாவதி! நீ பேசுவது ஆச்சர்யமாக விருக்கின்றது? மகாராஜா சோர்வுற்றிருப்பதைக்கண்டும் நான் வாராமலிருப்பனோ? நானும் வருகின்றேன்.

{ பத்மாவதியும் சூடாலையும் சிகித்துவசனருகே செல்லுகிறார்.

பத்:—(தனக்குள்) மகாராஜா ஒருநாளும் என்னைநோக்கி யழைத்ததேயின்று; அங்ஙனமாக இன்றழைத்தற் கொருகாரணம் அத்தியாவசியகமாக விருக்கவேண்டும். நாயினுங் கீழாய வென்னை பொருபொருளாக மதித்து, மரியாதையாக வருமாறு குறிப்பிட்டதை நோக்குமிடத்து, ஏதோவொரு விசேஷ மிருக்கவேண்டும்? (வெளிப்படையாய்) மன்னர் மன்ன! நமஸ்காரம்.

சிகி:—சூடாலே! அருகேவா? உனதுமுகமும் எனது முகம்போலப் பொலிவில்லாம லிருப்பதற்குக் காரணமென்ன? நமது பத்மாவதி முகமாத்திரம் மலர்ந்த தாமரை மலர்போல இருப்பதற்குக் காரண மென்ன?

பத்:—பூபால! தேவர் அடியாளைப்பற்றி விசேஷமாகக் கூறுவதை நோக்க வெனக்கச்சமாக விருக்கின்றது. பிழையிருந்தால் மன்னித் தருளவேண்டும்.

சிகி:—பத்மாவதி! பிழை யொன்றுமில்லை. விகடகவி உன்னைப் பற்றி யொன்று கூறினன். அதையறிய விரும்புகிறேன்.

பத்:—விகடகவிக் கென்னவேலை. தாங்கள் உணவுகொள்ளவாருங்கள்; முகம் மிகவும் வாட்டமாயிருக்கின்றது. நான் நந்தவனத்திற்குக்கூட வரவில்லை யென்று தாங்கள் வாட்டமுற்றீரென்று நினைக்கின்றேன்; நாளைய தினம் தவறாது கூட வருகின்றேன். பத்மாவதி வருவதுபற்றி மகிழ்ச்சியும் போயதுபற்றி வாட்டமும் கொள்ளாத வுத்தமியாதலின், அவள் முகம் மலர்ந்த தாமரைமலர்போல் விளங்குகின்றது.

சிகி:—பத்மாவதி! "உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கும்" என்னுங் கவியை யுனக்குச் சொன்னதுயார்? மறையாதுசொல். அதைத் தெரிந்துகொள்ள விருப்புடையவனாக விருக்கின்றேன்.

சூடா:—பிராணநாதா! நான்தான் அக்கவியைப் பத்மாவதிக்குச் சொல்லி, பாடஞ்செய்யுமாறு கூறினேன்.

சிகி:—பத்மாவதி! நீ அக்கவியைப் பாராயணஞ்செய்வதற்குக் காரணமென்ன? விபரமாகச் சொல்.

பத்:—மகாராஜா! ராணியாரவர்கள் என்மீ தன்புடையவராய்க் காண்பன வெல்லாம் கனூப்போல வொழிவனவாம்; உணர்வொன்றே யுறுதியாக விருப்பதாம்; சோகமோகங்கள் ஒழிவதற்கேது உணர்வை யுள்ளவா றுணருதலா மென் றடிக்கடி யநுக்கிரகஞ் செய்துவருவார்; அங்ஙனம் செய்துவரும் காலத்தில் ஒருநாள் நான், மங்கையர்க் கரசியே! தாங்கள் கூறியவாறாக வொழுகவெனக்கு முடியவில்லை! எப்போதுஞ் சிந்தனை செய்யுமாறு யாதாவதொன்றநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தேன்; அப்போ தவர்கள் இக்கவியைச் சிந்தனை செய்யுமா றனுக்கிரகஞ் செய்தார்கள். அது முதற்கொண் டதனைச் சிந்தனைசெய்து வருகின்றேன்.

சிகி:—அவ்வாறு சிந்தனைசெய்வதால், நீயடைந்த பயன் யாது?

பத்:—(சிறிது யோசித்து) சொல்லாதிருக்க முடியாதென்று (வெளிப்படையாய்) அதனைச்சிந்தித்து, அதனருத்தத்தைக் கவனிக்கும்போது, என்னுள்ளம் பனிக்கட்டிபோலக் குளிர்ச்சியாக விருக்கின்றது; அதனு லெனக்கு உலகபோகத்தில் ஒரு சிறிதும் விருப்பமுண்டாகவில்லை; இனி நான் கன்னிகையாயே யிருந்து காலத்தைக் கழிக்கத் தீர்மானித்திருக்கின்றேன்.

சிகி:—நன்றாகவிருக்கின்றது! என்ன துணிபு பத்மாவதி! நீ மகாபாக்யவதி. உனக் கித்தத்துவத்தை யுபதேசித்த சூடாலையும் மகாபாக்கியவதி. சூடாலே! அக்கவியின்பொருள் எனக்கு ஒருவாறாக விளங்குகின்றதேயன்றி, நன்றாக விளங்கவில்லை; அதன் பொருளை விளக்கமாகச் சொல்லவேண்டும்.

சூடா:—அக்கவியின் பொருளை எத்தனையோ முறை சிவப்பிரகாச சுவாமிகள் கூறக்கேட்டிருக்கின்றீர்களே! நானுங் கூட வந்திருக்கின்றேனே; அதைத்தான் பத்மாவதிக்கு ஞாபகத்திற்கு வந்தவளவாகக் கூறினேன். பத்மாவதி தாங்கள் கூறியவாறு பாக்யவதியே! எனக்கின்னும் உள்ளக்குளிர்ச்சி யுண்டாகவில்லை; அதனுற்றான் நான் சோகமோகங்களால் துன்புறுகின்றேன். நாமிருவரும் நாளையதினம் ஆநந்தாசிரமத்திற்குச் சென்று, மகாத்மா சிவப்பிரகாச சுவாமிகளிடத்து இதுபற்றி விசாரிப்போம்.

போகின்றார்கள்.

நான்காம் காட்சி.

இடம்-மாளவதேசத்து ஆநந்தாசிரமம்.

பாத்திரங்கள்-சிகித்துவஜன்-சூடாலை-சிவப்பிரகாசசுவாமிகள்.

காலம்-முற்பகல்-காலை.

சிகித்துவஜனும் சூடாலையும் சிவப்பிரகாச சுவாமியைவணங்கித் தத்துவவிசாரஞ்செய்கின்றனர்.

சிகித்துவஜன்:—சூடாலை! சுவாமிகள் சித்திரப் பிரதிமைபோல அசையாதிருந்து சமாதிசெய்வதை நோக்க, எனக்குப் பேரானந்தமாக விருக்கின்றது; அவர்வசிப்பதற்றான் நமது தேசம் ஒன்றாலுங் குறைவின்றி விளங்குகின்றதென்று நினைக்கின்றேன். அவர்முகம் பூரணச் சந்திரன்போல விளங்குகின்றதுபார். கடுந்துறவுபூண்டு காமாதியற்றுக்ககனம்போன் றொன்றோடும் பற்றின்றி யொழுகுமித் தத்துவ வித்தக சிரேட்டரைத் தரிசிக்கும் பாக்கிய மெனக் கின்று உன்னால் கிடைத்தது.

சூடா.—சுவாமிகள் சமாதி கலைந்து வெளியே வந்துட்கார்ந்திருக்கின்றார்! நமஸ்காரம் செய்வோம் வாருங்கள்.

(நமஸ்காரஞ் செய்தெழுந்தார்கள்)

சிவப்பிரகாச சுவாமிகள்:—வெகுநாளாயிற்று இங்கேகவந்து; சௌக்கியமா?

சிகி:—தேவரிடத்து ஓரையநிவிர்த்தியின் பொருட்டு வந்தோம்.

சிவ:—என்ன ஐயம்?

சிகி-—'உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கும்' என்னுங் கவிக்குப் பொருளுள்ளவாறு விளங்காமையே.

சிவ:—இதுபற்றிப் பலமுறை கூறியுள்ளேன்; ஊன்றிக் கவனிக்கவில்லைபோலும்!

சிகி:—ஆம்.

சிவ:—அசத்து சத்தின்முடியிலும், மறம் (தீமை) அறத்தின் முடியிலும், துன்பம் இன்பத்தின்முடியிலும்இருக்குமென்ப

ததன் தாத்பரியம். இவை இராப்பகல் போன்று தொடர்ந்து வருவனவாம்; இவற்றிற்கு வேருகவிளங்கப் பழகவேண்டு மென்பதாம். இருப்பிற்கும் இல்லாமைக்கும் அறத்திற்கும் மறத்திற்கும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வேருக விளங்குநிலை "நடக்கினு மோடினு நிற்கினும் வேரொரு நாட்டமின்றிக், கிடக்கினுஞ் செவ்வி திருக்கினு நல்லருட் கேள்வியிலே, தொடக்குமென் னெஞ்ச மனமற்ற பூரணத் தொட்டிக்குளே, முடக்குவன் யான்பர மாநந்த நித்திரை மூடிடுமே" என்று தாயுமானவர் கூறியவா றொழுகுகின்றவர்கட்குச் சித்தியாம். பரமாநந்த நித்திரை செய்பவர்க்கே கொள்ளத்தக்கனவாகும் பொருளொன்று மில்லையாம். கொள்ளுவது தள்ளுவது என்னும் வேற்றுமை யுள்ள பரியந்தம் பரமாநந்த நித்திரை சம்பவியாது.

சிசி:—யாங்க ளினி யாது செய்யவேண்டும்? அதனை யெங்களுக் குபதேசித்தருளவேண்டும்.

சிவ:—உள்ளங்கையிலுள்ள ஜலம்போல நிமிஷத்திற்கு நிமிஷம் ஆயுள் மெதுவாகக் குறைந்து வருதலையும், மழைக்காலத் துச் சுரைச்செடிபோன்று இதுவேண்டும் அதுவேண்டும் என்னும் ஆசைவளர்ந்து வருதலையும், சாத்காலத்திலே நதியில் நீரோட்டம் குறைவதுபோன்று அழகு குறைந்து வருதலையும், முன்னனுபவித்த இன்பம்பின் துன்பமாகத் தோன்று தலையும் கவனியாதுபோனதினுற்றான் விருப்பாலும் வெறுப்பாலும் வருத்தமுறுவது சம்பவிக்கின்றது.

(தொடரும்.)

உபநிஷதார்த்த தீபிகை.

மஹோபநிஷத்.

(230 வது பக்கத்தின் தொடர்ச்சி.)

[உப] இந்த மஹோபநிஷத்தை எந்தப்பிராமணன் படிப்பானே அவன் சுரோத்திரிய னல்லாதவனுனாலும் சுரோத்திரிய

ணுவான். (வேதத்தை அத்தியயனஞ் செய்தவனுவான்); உபநயனமில்லாதவனுனுலும் உபநயன மானவனுவான்;(சிரௌதஸ்மார்த்த) அக்னிகளால்சுத்தமானவனுவான்;வாயுவால் சுத்தமானவனுவான்; சூர்யனுல் சுத்தி செய்யப் பட்டவனுவான்; சந்திரனுல் சுத்திசெய்யப்பட்டவனுவான்.

[குறிப்பு] சங்கராநந்தர், நாராயணரிருவரும் இப்பலசுருதியைப் படித்து உபநிஷத்தையும் தங்கள் உரைகளையும் முடித்துவிடுகிறுர்கள். ஆனுல் தென்தேசத்துப் பாடப்படி இப்பலசுருதி காணப்படவில்லை; அதில் இதுவரை மொழிபெயர்த்த பாகமும் உபநிஷத்தில் முதல் அத்தியாயமாக நிற்க, மேல் ஐந்து அத்தியாயங்கள் அதிகமாக இருக்கின்றன.

இரண்டா மத்தியாயம்.

(1) மகா தேஜஸ்வியும் ஸ்வரூபாநந்தத்திலேயே தத்பரராயும் (ஊக்கமுடையவராயும்), பிறவியிலேயே முனிசிரேஷ்டருமான சுகரென்பவர் எதுசத்தியமோ (உண்மைப்பொருளோ) அதையடைந்தார்.

(2) அப்படிப்பட்ட தமது விவேகத்தால் பெருந்தன்மையுள்ளமனதை யுடைய அவர்தாமே மிகவும் நன்ருய் வெகுகாலம் விசாரணை செய்து தமதாத்ம நிச்சயத்தை யடைந்தார்.

(3 - 4) வாக்குக் கெட்டாமையாலும் (பஞ்ச) இந்திரியங்களாலும் ஆருவதாகிய மனதினுலும் அடையக் கூடாமையாலும் ஆத்மா சின்மாத்திரமே யானது. ஆகாசத்திற்கும் சூக்ஷ்மமானதால் அஃது அணு வெனப்படும். பரமமான (மிகச்சிரேஷ்டமான) இவ்வணுவாகிய சித்தினிடத்து அநேககோடி பிரஹ்மாண்டங்களாகிய தூசுகள் சக்தியின் மாறுதலால் உண்டாகி ஸ்திதியை யடைந்து லயமாகின்றன.

(5) பாஹிய சூன்யமா யிருத்தலால் ஆகாசத்தைப் போலும், சித்ஸ்வரூபமா யிருத்தலால் ஆகாசத்தைப்போலல்லாமலும் எது சிறிதும் (இதுவதுவெனக் குறிக்கப்படும்) வஸ்து வல்லவோ,எது நிர்த்தேசம் செய்யக்கூடாததோ அது சத்தையெனப்படும்.

(6) பிரகாச ஸ்வரூபமா யிருத்தலால் சேதனமாகவும், வேத்ய மல்லாததால் ‡ (அறியப்படும் பொருளாகாமையால்) கல்லுக்குச் சமானமாகவும் (இருக்கும்). (அது) ஸ்வாத்மாவாகிய நிர்மலமான ஆகாயத்தில் ஜகங்களின் உற்பத்தி யாகிய சித்திரத்தை யெழுதா நிற்கும்.

(7) இச்சகங்களெல்லாம் அதன் (ஆத்மாவின்) பிரகாச மாத்திரமா யிருத்தலால், அதைவிட (ஆத்மாவைவிட) வெறுய், (ஒன்றும்) இல்லை. ஜகத்தின் பேதமும் அதன் (ஜகத்தின்) பிரகாசமென்ற பேதமும் அதன்மயமே யாகும்.

(8) சர்வவியாபியாயும் சர்வத்திலும் சம்பந்த முடையதாகவும் இருக்கும் அவ்வாத்மா போக்கில்லாததால் (போதற்குத் தன்னை விட வேருகிய இடமில்லாமையால்) போகின்ற தில்லை. அதற்கு ஆசிரயமொன்று மில்லாமையால் அது இல்லை (நாஸ்தி) யென்றே சொல்லவேண்டும். (ஆயினும்) சத்ரூபமாதலால் இருக்கின்றது (அஸ்தி) என்று சொல்லவேண்டும்.

(9) விஞ்ஞானமாகவும் ஆநந்தமாகவு மிருக்கும் அப்பிரஹ்மம் கொடுப்பவனுக்கும் அவனது கொடைக்கும் ஆதாரமானது; சர்வசங்கற்பங்களையும் விட்டுச் சேதனத்தை(அறிவை)ப்பிடித்தது (அடைந்தது) அது.

(10 - 12) ஜாக்கிராவஸ்தையின் ஞானபாவமே எதன் ஞானமென்று அறிவுடையோர் கூறுவரோ, எதன் சங்கோச (குவிதல்) விகாசங்களால்(விரிதல்களால்)ஜகத்தின் பிரளயமும் சிருஷ்டியும் உண்டாகின்றனவோ, எது வேதாந்தவாக்கியங்களுக்கெல்லாம் முடிவோ, எது வாக்குக்கு எட்டாததோ, அந்தச் சச்சித்பரானந்த பிரஹ்மமே நான்; வேறல்லவென்று தன்னுடைய சூக்ஷ்ம புத்தியினுலேயே சகலத்தையும் அறிந்தார் சுகமுனிவர். இவ்விதமாகப் பரவஸ்துவைத்தாமேயடைந்தும் மனோ விசிராந்தி யடையவில்லை.

---

‡ இவ்விடத்தில் "பகுத்தறி கின்ற வஸ்துவல்ல வாதலால்" என இருக்கவேண்டும். ஏனெனின் கல்லானது சேதன மன்மையால் பகுத்தறியாது. பரவஸ்து எல்லாவற்றையும் ஊடுருவி நிற்கும் பேரறிவு ஸ்வரூபமாயிருத்தலால், அதுபகுத்தறியாது. எனவே கல்லுக்கும் பரவஸ்துவுக்கும் ஒருவிதமாய சாம்யம் (ஒப்பு) இருக்கும்.

(13 - 14) இதுவே(உண்மையான) வஸ்து வென்னும் ஆத்மா வினிடத்தவர் விசுவாசத்தை யடையவில்லை. எவ்வாறு சாதக பட்சியானது மற்றத் தீர்த்த தாரைகளை யபேக்ஷியாமல் (மேகத்தி னின்று விழும் மழைத்துளிகளை மாத்திரம் காத்திருந்து சாப்பிட்டு ஜீவிக்குமோ) அவ்வாறு அவர் மனமானது பிரதிபந்தங்கள் மிகுந்துள்ள போகங்களினின்றும் விஷய சாபல்யமின்றி மிகவும் விகாமத்தை (ஒழிவை) யடைந்தது.

M. K. நாராயணசாமி ஐயர்,
பீ-ஏ., பி-எல்.

தத்துவார்த்த சம்பாஷணை.

ராமசாமி:—முனிசாமியா வரட்டும்; உன்னைக்கண்டு வெகுநாளாயிற்றே, சௌக்கியமா?

முனிசாமி:-ராமசாமி! சௌக்கியத்திற் கென்னகுறைவு? ஒரு பெரியவர் சிலகாலமாக என்வீட்டில் வந்திருக்கின்றார். அவர்மிகு சாதுவா யிருப்பதால், அவர்க்குத் தொண்டுசெய்து வருகின்றேன்; அவரைப் பிரிந்திருக்கமனம் வருவதில்லை; அதனாற்றான் இங்கேவருவதற்குக் கூடாமையாயிற்று.

ராம:-அப்படியா சமாச்சாரம்; என்னையடியோடு மறந்துவிட்டாய்போலும்! இப்போது மாத்திரம் எப்படி வந்துவிட்டாய்?

முனி:-அந்தப் பெரியவர் இன்றையதினம்திருக்களர்க்குச்சென்றார்; இன்னும் இரண்டு மூன்றுதினங்களுள் இங்கே வந்துவிடுவார். அவரைப்பற்றிச் சொல்லத்தான் இப்போது இவிடத்திற்கு வந்தேன்.

ராம:-முனிசாமி!உன்முகமிப்போது என்றுமில்லாத மலர்ச்சியுடையதாயிருப்பதற்குக்காரணம் என்ன? நீ இப்போது ஒரு தத்துவஞானியைப்போல விளங்குகிறாயென்று நினைக்கிறேன்; நீ சொல்லும் அவர் ஒரு பெரிய ஞானியா யிருக்கவேண்டு மென்றும் எண்ணுகிறேன். அவர்ஞானியாயிருக்க வேண்டுமென்பதை உன் முகம் எனக்குத்தெரிவிக்கின்றது.

முனி:-என்ன ராமசாமி! வேடிக்கை வேடிக்கையாகப் பேசுகின்றாய். அந்தப்பெரியவர் ஞானியென்பதற்குச் சந்தேகமேயில்லை.

அவரிடத்தில் எனது தந்தை அடிமையாகவிருந்து அவர் சொல்லியபடி, நடந்து வருகின்றார். எனது தந்தையாரைப் பற்றித்தானுனக்குத்தெரியுமே! பலரானும் மிகப்பெரியவரென்று சொல்லப்படுகிற எனது தந்தையே அவரிடத்தில் அடிமைத்தொண்டுசெய்து வருவாராயின், அப்பெரியவரைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? எனக்கு அப்பெரியவரைப்பார்க்கும் போதெல்லாம் சாந்தமுண்டாகின்றது. அவ்வளவேயல்லாமல்வேறுவிசேஷம்என்னிடத்திலில்லை. என்னையினி ஞானி கீனியென்று சொல்லிப் பரிகாசஞ் செய்யாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராம: முனிசாமி! நான்பொய்வார்த்தையா சொல்லுகிறேன். உன் முகத்தைக் கண்ணாடியிற் சிறிது கவனித்துப்பார்த்தால் நான் சொல்லுவது நிஜமென்று உனக்குத்தெரியும். எங்கள் வீட்டிலிருக்கும் சின்மயசிவப்பிரகாச சுவாமிகளது முகப்பொலிவைப்போலல்லவா உன்முகம்விளங்குகின்றது. உன்மனதில் ஏதோ ஒரு புதுக்கிளர்ச்சி யுண்டாயிருக்கவேண்டுமென்று நினைக்கின்றேன்.

அந்தக்கிளர்ச்சியின் காரணத்தைச் சொல்லவேண்டும்.

முனி: காரணமாசொல்லவேண்டும்? நன்றாயிருக்கின்றது! அப்பெரியவர் எப்போதும் அமைதியாகவே யிருப்பார். யாராவது வந்து உலகம், கடவுள், ஜீவன், கன்மம் ஜன்மம், மரணமுதலியவற்றைப் பேசவாரம்பித்தால் பேசுவார்; வேறுவிஷயமாகப் பேசினால் வாயைத்திறவாதிருப்பர். சிற்சிலசமயங்களில்எனக்குச்சிலவற்றைச் சொல்லிருக்கிறார். அவற்றுள் ஒவ்வொன்றும் விலை மதிக்கத்தகாததென்பது என்னுடைய தீர்மானம்.

ராம: அப்படியா! அதை யெனக்குச் சொல்லக்கூடாதோ? அதனாற்றான் நீ இப்படிப்பட்ட நிலையை யடைந்திருக்கின்றாய். அதைச்சொல்லு.

முனி:-என்னராசாமிஇப்படிப்பேசுகின்றாய்? அவர்கூறியபடி சொல்லுவதற்கு என்னால் முடியாது? அவர் சொன்னவற்றில் மிக முக்கியமானவை யென்றுஎன்புத்திக்கெட்டிய வற்றைத் தினசரிப் புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறேன். வேண்டுமானால், அதைக்கொடுக்கிறேன்; படித்துப்பார்க்கலாம்.

இரா: வேண்டுமானால் என்று கூறுகின்றாய்; வெகுநன்றாகவிருக்கின்றது?

அந்தப்புஸ்தகத்தி லெழுதியிருப்பதை நீயே படித்து விளக்க மாகஎனக்குச் சொல்லவேண்டும். அவர் வந்தவுடன் அவரிடத்திற் கழைத்துக்கொண்டுபோய்ச் சிநேகமுஞ்செய்து வைக்கவேண்டும். உனக்குப் படிப்பது கஷ்டமாகவிருந்தால் அந்தத் தினசரிப்புத் தகத்தை யிப்போது என்னிடத்திற்கொடு; நானேபடித்துப்பார்க் கிறேன்.

முனி: அதை நானே படித்து விளங்கச் சொல்லுகிறேன்.

(வரும்).
அறிவானந்தம்.

இந்து மதமாவதென்ன?

ஒரு மகாத்மாவின் பிரசங்கம்.

(244 வது பக்கத்தின் தொடர்ச்சி).

தனித்தனியே யோசித்துப் பார்க்குமிடத்து இரண்டும் பூர்த் தியான விவரத்தை யுடையனவல்ல; மதம் என்பதற்கு மேற்படி இருவர்கொண்ட அபிப்பிராயங்களையும் ஒன்றுசேர்த்து அர்த்தங் கொண்டால் பூர்த்தியான விவரமாகு மென்பதற்குத் தடையில்லை. ஜர்மானிதேசத்து வாசியாகிய (Professor Max Muller) என்பவ ரும் இந்த அபிப்பிராயத்தைக் கொண்டவர்தான். அப்படி ஒன்று சேர்த்தால் ஞானத்தையும் நீதியையும் தெரிவிப்பது எதுவோ அதுதான் மதமெனப் படுவது என்றேற்படுகின்றது.

ஞானமென்றால் என்ன? நீதி என்றால் என்ன? என்று யோசிக்க வேண்டியதுதான். ஞானமென்றாலும்அறிவென்றாலும் ஒக்கும். அறிவென்பது அறியுந் தன்மையுடையது. அறிவதென் றால் எதை? உலகம் எப்படிவந்தது? உலகத்திற்குச் சடத்தன்மை யும் நமக்கு சித்துத்தன்மையும் வாய்த்ததற்குக் காரணமென்ன? உலகம் நாநாவித பேதங்களாகத் தோற்றுவதற்குக் காரணமென் ன? சுக துக்கத்துக்குக் காரணமென்ன? பிறந்து, இருந்து மடி வதற்குக் காரணமென்ன?என்றற்றொடக்கத்து அரிய விஷயங்களை யுக்தி அநுபவத்துக் கியைய விசாரவாயிலாக அறிவதுதான் ஞானம். நீதியென்றால் என்ன? மானிடர் யாவருமே இச்சை

பென்கிற வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள். இச்சைநீங்கிய உயிர்கள் இல்லவேயில்லை. ஒரு விஷயத்தி லில்லாவிட்டாலும் மற்றொரு விஷயத்தில் இச்சையிருந்தே தீருமென்பது ஒருவரும் ஆட்சேபிக்க முடியாத தீர்ப்பு. இந்தவியாதிக்குத் திருப்தி என்பதேமருந்தாம். இச்சையைக்கொண்ட வொவ்வொருவரும் திருப்தியடையும் பொருட்டுத் தாம் செய்யும் ஒவ்வொரு துணிவான காரியங்கள் அந்நியருக்கு உயிர்ச் சேதத்தையும்அனேகவிஷயங்களில் உண்டாக்கி விடுகிற படியால்,மானிடர் செய்யுந் தொழில்கள் எல்லாவற்றையும் விதி யென்றூந் நிஷேதமென்றும் இரண்டு விதமாக்கி,தனக்கும் அந்நியருக்கும் தீங்கை விளைவிக்கிறசெய்கைகள் நிஷேதம் என்றும், இருவிதத்திலும் நன்மையைவிளைவிப்பது விதி யென்றும் அறியவேண்டும். இவ்விரண்டு வகுப்புச் செய்கைகளின் விவரங்களையும் பிரயோசனங்களையுந் தெரிவிக்கிற தெதுவோ அதுவே நீதி. இந்த அளவு மதமெனப் பட்டதென்னும் என்ற விவரத்தை ஏற்கத்தக்கதென்று யோசிக்கு மிடத்து, உலகம் எப்படி வந்தது என்றற்றொடக்கத்து அரிய கேள்விகளுக்கு யுக்தி அநுபவத்துக் கொத்த தீர்ப்புகளைத் தெரிவிக்குந் தன்மையால் ஞானத்தையும் தெரிந்துகொண்டவொருவன், தான் அடையவேண்டிய தின்னதென்றும் தெரிவித்து, அடையும் பொருட்டுச் செய்ய வேண்டுவனவும் செய்யக்கூடாதனவும் இன்னவென்றும் தெரிவிக்கிற தன்மையால் ;நீதியையும் உடைய தெதுவோ அதுவே மதம் என்று சொல்லத்தக்கதென்று முடிவாகின்றது.

உலகத்தைப் பற்றியும் உயிரைப் பற்றியும் ஒவ்வொரு மதமும் கொடுக்க வந்த தீர்ப்புகள் வெவ்வேறாயிருக்கின்றன. ஒருவர் கட்சியை மற்றொருவர் மறுக்க, மற்றொருவர் கட்சியை இவர் மறுத்து வருவதாயிருந்தாலும் முதலாவது பாகத்தை யோசிக்குமிடத்து எந்த மதம் கடவுள் இருப்பை ஒப்புக் கொள்ளவில்லை? நாமும் உலகமும் கடவுளால் படைக்கப் பட்டோமென்று எது சம்மதிக்க வில்லை? கடவுள் சர்வ சுதந்திர முடையவரென்றும் அவர் சிந்தித்த மாத்திரத்திலேயே எல்லா முண்டாகுமென்றும், சிருஷ்டித்த காரணத்தை நம்மாற் கண்டு பிடிக்க முடியாதென்றும் சொல்லாமல் எந்த மதம் என்ன காரணத்தைச் சொல்லியிருக்கிறது? அவரைநாம்வணங்க வேண்டு மென்று எது சொல்லவில்லை? இரண்டாவது பாகமாகிய நீதிகளை யோசிக்கு மிடத்து எந்த மதம்

ஜீவகாருண்யத்தை வற்புறுத்திச் சொல்லவில்லை? ஜீவதசையில் எப்படிப்பட்ட நஷ்டத்தை யடைந்தோனும் நன்மையே செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்பவர்களுக்குத்தான் கடவுள் நித்திய சுகத்தைக் கொடுப்பாரென்றும், இதற்கடைபாளமாய் இன்னின்ன அடியார்கள் இவ்வித நல்வழிகளைப் பற்றிக்கொண்டிருந்த படியால் மோட்சத்தை யடைந்தார்களென்றும் எந்த மதம் தெரிவிக்கவில்லை? எந்தமதம் தனக்கேனும் அந்நியருக்கேனும் தீங்கை விளைவிக்கும் படியான செயல்களை விதித்திருக்கின்றது. இல்லவேயில்லை? கடவுள் பெயர்களும் உலகத்தையும் நம்மையும் படைத்த விதமும் காரணமும் அடியார்கள் பெயர்களும், அவர்கள் செய்கையும் வெவ்வேறாயிருந்தாலும், பொது விஷயத்தைப் பார்க்குமிடத்து மதங்கள் உயர்வுதாழ் வுடையனவென்று புலப்படவேயில்லை.

(வரும்).

ஹிதவசனி.

உலகத் தியல்பு.

(216-வது பக்கத்தொடர்ச்சி.)

இனிப் பின் வரும் உதாரணங்கொண்டு இவ்வரிய ஆராய்ச்சி செய்யத் தொடங்குவாம். நான்கு புத்தகங்கள் ஒருமேசையின் மீது வைத்துள்ளனவாக நினைத்துக் கொள்ளுவோம். அப்புத்தகங்களைப்பற்றிச் சிறிதும் தெரிந்திராத ஒருவனுக்கு அவற்றைக்குறித்து யாதாவதுசொல்லவும் வேண்டியகாலம் வருகின்றது. அவ்வாறு வந்தவிடத்து அவை வைத்திருக்கும் மேசையின் மீதுள்ள அமைப்புப்பற்றி, மேசைக்கு அடுத்திருக்கும் புத்தகம் முதலது எனக் கொள்ளப் படுகிறது. அதனையடுத்து மேலிருப்பது இரண்டாவதென்றும் அதற்குமேலுள்ளது மூன்றாவதென்றும் அதற்கு மேலுள்ளது நான்காவதென்றும் குறிக்கப்படுகின்றன. அவற்றின் இயற்கைப் பெயர் முதலியன தெரியாதிருக்குங் காரணத்தாலே முதலது இரண்டாவது முதலிய புதியநாமங்களை அவை ஏற்றன. இங்ஙனமேற்ற வின்நாமங்கள் தம்மிருப்பை அமைந்தாவது இடத்தை நோக்கியேயாம். இதற்குப் பொருள் மேசையாகிய

இடத்திலிருக்கிறதற்கு முதலாவது என்று பேரிடப்பட்டமை யின், இதற்கு மேலுள்ளதற்கு அஃதாவது இதனை யிடமாகக் கொண்டுள்ளதற்கு இரண்டாவதென்றும், இவ்வாறே மூன்றாவதும் நான்காவதும் கீழுள்ளனவற்றின் இடத்திலிருந்து இப்பரியாய நாமங்களை ஏற்கின்றன. ஆகவே, இப்புத்தகங்கள் இந்தப் பெயர்களை ஏற்றது தாமிருக்கு மிடம் பற்றியேயாம்.

மீட்டு மிவற்றை மேசையினின்றெடுத்து வெவ்வேறு இடங்களில்வைத்து இப்போதிவற்றைக் குறிக்கத் தலைப்படின், இவையுள்ள விடம் (அஃதாவது இவை வைத்துள்ள மேசை அல்லது புத்தகப்பலகணி) நோக்கி இவற்றைக் குறிக்கின்றோம். அஃதாவது மேசையின் மேலுள்ள புத்தகமென்றும், பலகணியிலுள்ள புத்தகமென்றுமாம். இங்குப் புத்தகத்தைக் குறிக்க வந்தவன் புத்தகத்தையும் அஃதுள்ள விடத்தையும் குறிக்கின்றான். ஒரு புத்தகம் அது வைக்கப் பட்டிருந்த மேஜை அல்லது பலகணிகளிலிருந்து எடுக்கப்பட்டு மேலே ஆகாயத்தில் எறியப்படின், அது செல்லுமளவுசென்று கீழ்விழும் வரைக்கும் ஆகாயத்திலுள்ள புத்தகமென்று ஆகாயமாகிய இடத்தை அஃதிருக்கு மிடமாகப் பேசுகின்றோம். ஆகவே, இப்புத்தகங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்தில் தானிருக்கின்றதென் றேற்படுகிறது. புத்தகமெனப் பேசும்போதெல்லாம் அஃதுள்ளவிடம் குறித்துப் பேசவேண்டுமென்ற கட்டாயமில்லை. அதன் நாமம் முதலியன தெரிந்துள்ளானுக்கு அஃதுள்ளவிடத்தைக் குறிக்கவேண்டிய அவசரமில்லை. ஆனாலும் அதன் நாமம் சொன்னமாத்திரத்திலேயே அஃது அதனையும் அஃதுள்ள விடத்தையும் குறிப்பிக்கின்றது. புத்தகமென்பது காகிதங்களையும் இருபுறம் அட்டைகளையும் உடையதாம். இவை இல்லாது புத்தகமென்பதில்லவே யில்லை. இதனால் பெறப்படுவது புத்தகமென்பது தனக்குக்காரணமானகாகிதத்தாள்களையும் இருபுறத்தட்டைகளையும் தானுள்ள விடத்தையும் கொண்டுள்ளது.

இப்புத்தகத்திற்குக்காரணமான காகிதத்தாள்களையும் இருபுறத்தட்டைகளையும் இப்புத்தகத்தை வகிக்கும் இடத்தையும் குறித்துச் சிந்திப்பாம். நமக்குமுன் ஒரு மேசையின் மீது நான்கு புத்தகங்கள் அடுக்கி வைத்துள்ளனவாக ஆரம்பத்தில் சொன்னதை நினைத்துக் கொள்ளுவோம். மேசையினை அடுத்திருந்து முதலாது என்ற நாமமேற்ற புத்தகம் முழுமையும் மேசையின் சம்பந்தம்

கொண்டில்லை. ஆனால் அஃததனதுஒருபகுதியாகிய ஒருபுறத்தட்டைமேசையின் மேலுள்ளது. அப்புத்தகத்தின் மற்றைய பகுதிகள்மேசையோடு சம்பந்தம் நேரேகொள்ளாது ஆனால்அவற்றோடு ஒருங்கு பட்டுள்ள அவ்வட்டையின் மூலமாகச் சம்பந்தங்கொண்டுள்ளன இங்ஙனம் மேசையோடு நேரே சம்பந்தங் கொண்டுள்ள அட்டையை முன்னதென்றும் மற்றதைப் பின்னதென்றும் பெயரிடுவோம். இம் முன்னட்டையை யடுத்திருக்கும் தாளைக் குறிக்கவேண்டின் அது முதலட்டையாகிற விடத்தி லிருக்கிறதாள் என ஏற்படும்.

அடுத்ததாளைக் குறிக்கின் முதல்தாளாகிற விடத்திலிருக்கும் தாளென்றேற்படும். இவ்வாறே செய்யின்ஒவ்வொருதாளும்தானேரிடத்திலிருந்து அடுத்திருக்கும்தாளுக்கு இடமாகிறது. பின்னருள்ள அட்டையானதுகீழேயுள்ளதாளாகும் இடத்திருந்து தனக்கு மேலுள்ள புத்தகத்திற்கு இடமாகிறது. ஆதலால் இப்புத்தக முழுமையும் தாள் அட்டை அவையுள்ள இடமென முடிகிறது. இவ்வாறு ஆராய்ச்சிசெய்யின் மேலுள்ள புத்தகங்களும் அவ்வாறே அவற்றைச் சூக்குமப் பொருள்களாகவும் அவையிருக்கும் இடமாகவும் முடிகின்றன.

இன்னும் இதனை அதிசூட்சுமமாகக் காணக் கருத்துடையார் இத்திருட்டாந்தத்தைக்கொண்டு ஒவ்வொருதாளும் காகிதப் பொடியாகியுள்ளதென்ற வெளிப்படை நிச்சயத்தைக் கவனித்து மேற்சென்னவாறே ஆராயின் அவையும் இடத்தோடுசம்பந்தப்பட்டனவை யென்றே யேற்படும். ஆதலால் ஒவ்வொரு தாளும் தன்னையாக்குவிப்பது காகிதப் பொடிகளின் சமுதாயமும் அவையிருக்கு மிடமுமென்றே நிச்சயிக்கப்படும். ஆதலால்புத்தகம் என்பது சில பொருள்களின் கூட்டமும் இடமுமென ஏற்படுகிறது. இவ்வாறே சோதிக்கில் உலக காரணப் பொருள்கள்யாவும் அவற்றையாக்குவிக்கும் பொருள்களின் தொகுப்பும் இடமுமாகவேமுடியும். இங்குக்காரணப்பொருள்களைப்பற்றியும் இடத்தைப் பற்றியும் பரிசோதிக்கவேண்டுவது ஆவசியகமே. பொருளின்வகை பல; அவற்றை யாக்கும் காரணப் பொருள்கள் அவற்றின் அணுவென ஒருவாறு விரிவஞ்சிமொழிவோம். இவ்வணுபற்றிய விசாரணைபிறவிடங்களில்காணக்கூடும்? பொருள்கள் யாவும் அவற்றின்

காரண அணுக்களால் ஆன்வையென பொதுவாகப் பேசி இடமென்பது என்ன வெனப் பின்னால் யோசிப்பாம்.

வா. ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

பிராணிசாஸ்திரம்.

(241 வது பக்கத்தின் தொடர்ச்சி.)

2. இரட்டைக்குளம்புள்ளன.

சாகபக்ஷிணியில் இரட்டைக்குளம்புள்ள உட்பிரிவில் ஒட்டை, மான், ஆடு, எருமை, பசு முதலிய அடங்கியவை. இவற்றின் முக்கிய ஆகாரம் புல், வைக்கோல், தழைமுதலியன. மேற்கூறிய ஜந்துக்களெல்லாம் அசைபோடும் சுபாவமுடையன.

இவற்றின் ஆகாரத்துக்குத் தக்கவாறு ஏற்பட்டுள்ள தேக அமைப்பு.

புற்கள்:—புல்லைத் தின்று அசைபோடுகிற மேற்கண்ட மிருகங்களுக்கு மேல்வாயில் முன்பற்கள் இல்லை. ஒருவிதக் கடினமான தோல் இருக்கிறது. அடிவாயில் மாத்திரம் முன்பற்கள் உண்டு. கடைவாய்ப்பற்கள் மேலுங்கீழும் இருக்கின்றன. இவை தட்டையாய் எந்திரங்களைப்போல் இருக்கின்றன.

இரைப்பை:—குதிரைமுதலிய மற்ற மிருகங்களுக்கு ஒரே இரைப்பை இருப்பது போலல்லாமல் மேற்கூறிய அசைபோடும் மிருகங்களுக்கு 4 இரைப்பைகளுண்டு. இவற்றுள், முதலாவது மற்றப்பைகளைக்காட்டிலும் பெரிதாயிருக்கும். ஏனெனின் மேற்படி ஜந்துக்கள் தமக்குவேண்டியவளவு புல் வைக்கோல் தழைமுதலியவற்றை மேய்ந்து அவற்றை அப்படியே முதற்பையில் நிரப்புவதனால் அது மற்றயவற்றினும் பெரிதாக விருக்கவேண்டியிருக்கிறது.

பசு, எருமை, ஆடு முதலியவைகள் காடுகளிலாவது அல்லது வயல் வெளிகளிலாவது போய்ப் புல் மேயும்போது, மாமிசபக்ஷிணிகளான சிங்கம், புலிமுதலிய துஷ்டமிருகங்களாவது அல்

லது பயிர்களை மேயும்போது வயலுக்குச் சொந்தக்காரனாவது வந்து விட்டால், அவற்றோடாவது அவனோடாவது எதிர்த்துச் சண்டை செய்து தம்மைக் காத்துக்கொள்ளும் வல்லமையை உடையனவாயிருக்கவில்லை. ஆதலால் தமக்கு இரை அகப்பட்ட விடத்திலே மேற்சொன்ன சத்துருக்கள் தம் கண்களுக்குப் புலப்படாதிருக்கும் கொஞ்சநேரத்திலேயே தமக்கு வேண்டிய ஆகாரத்தை மேய்ந்து முதல் இரைப்பையில் நிரப்பிக்கொள்ளும். சத்துருக்களைக் கண்ட நிமிஷத்திலேயே ஓடிப்போய்த் தம்மிருப்பிடம் சேரும். பிறகு சாவகாசமாய் மேய்ந்த இரையை முதல்பையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் வாய்க்குக் கொண்டுவந்து கடைவாய்ப்பற்களால் நன்றாய் அரைத்து உருண்டை யுருண்டையாய் இரண்டாவது பையில் செலுத்தும். அவ்வுருண்டைகள் அங்குச் சற்றுத்தங்கி முறையே மூன்றும் நான்காம் பைகளில்செல்லும். நான்காம் பைகளில் சேர்ந்தபிறகு சுவாசாசயத்தின் மூலமாய்ச்செல்லும் பிராணவாயு திரவரூபமான அவ்வாகாரத்தின் மேல் பட்டவுடனே அவை சிவந்த இரத்தமாக மாறுகின்றன. இவ்விதமாய் மேய்ந்து விழுங்கின ஆகாரத்தை மறுபடியும் வாயில் கொண்டுவந்து மெல்லுவதற்குத்தான் அசைபோடுவதென்று பெயர்.

இவ்வசைபோடும் ஜந்துக்கள் சத்துருக்களை யெதிர்த்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தி யற்றவைகளா யிருப்பதால் வாய்த்த போது வேண்டிய இரையை மேயாது சத்துருக்களுக்கு அகப்படாமல் இருப்பிடம் சேர்ந்து சாவகாசமாய் மேய்ந்த இரையை மெல்லும். ஆகையால் இவற்றிற்கு அசைபோடுதல் இன்றியமையாதது.

அசைபோடும் பிராணிகளின் பொதுக் குணங்கள்.

1. இவை சாதாரணமாய்ப் பரஸ்பரம் (ஒன்றுக் கொன்று) அநுசரணையா யிருக்கும்.

2. ஒன்றோடொன்று சேர்ந்து கூட்டங் கூட்டமாய் வசிக்கும்.

3. இவ்வினத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜந்துவும் மனிதனால் பழகப்படுத்தக் கூடியது.

4. சாந்த முள்ளன.

அசைபோடும் ஜந்துக்களின் உட்பிரிவுகளாவன:—

(a) ஒட்டக வினம்.

(b) மானினம்.

(c) ஆட்டினம்.

(d) எருமை யினம்.

(e) பசு வினம்.

ஒட்டகவினம்.

அசைபோடும் ஜந்துக்களில் ஒட்டகம் ஒன்றுக்குத்தான் மேல்வாயிலும் கீழ்வாயிலும் முன்பற்கள் உண்டு. இந்த ஜந்து அருவருப்பான தோற்றத்தையும் விகாரமான நடையையுமுடையது. இது ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்களிலுள்ள பாலைவனப் பிரதேசங்களில் வசிப்பதற்குத் தகுந்தவாறு இதன்தேகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மணலில் புதையாமலிருக்கும்படி தட்டுகளைப்போல் அகன்றபாதங்களும், மணற் காற்றினால் இதன் கண்கள் துன்புறா வண்ணம் வேண்டுமென்றபோது தொங்கச் செய்யக் கூடிய நீண்டதோலை யுடைய கண்ணிமைகளும், பாலைவனங்களில் ஜலங்கிடைத்தால் கிடைத்தவிடத்திலேயே தனக்குவேண்டிய அளவு ஜலத்தைக் குடித்து நிரப்பி வைத்துக்கொள்ள இதன் வயிற்றில் ஒரு ஜலப்பையும், ஆகாரம் கிடைத்த விடத்தில்நிறையப்புசித்துக் கொழுப்பைச்சேர்த்து வைக்க முதுகின்மேல் ஒன்று அல்லது இரண்டுமுசுப்புகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இச்சந்துவானது அதிக உஷ்ணத்தினாலும், மணற்காற்றினாலும் ஜலங் கிடைக்காததினாலும் கடப்பதற்கு (தாண்டுவதற்கு) அசாத்தியமென்று யாவராலும் நிச்சயிக்கப்பட்ட பாலைவனங்களில் (மணல்வெளிகளில்)யாதொருவருத்தமுமின்றிப், பாரமானசுமைகளையும், பிரயாணிகளையும் சுமந்துகொண்டு செல்லுவதால் இதற்குப் பாலைவனக்கப்பல் என்ற காரணப்பெயர் கொடுக்கப்பட்டது. ஆப்பிரிக்கா அரேபியா முதலிய தேசங்களிலுள்ளவர்கள்ஒட்டகங்களையே ஒருசிறந்த செல்வமாகப் கருதுகிறார்கள். இவை பாலைவனங்களிற் செல்லும்போது மணற்காற்றுச் சிலமைல்களுக்கு அப்பால் அடித்தாலும் மோப்பத்தால் அறிந்து உடனே முழங்காலிட்டுப் படுத்துக்கொள்ளும்; உடனே இதையறிந்து பிரயாணிகள் அவற்றின் வயிற்றின் கீழ் தங்குவார்கள். இங்ஙனம் இவை தங்கள் யஜமான்களைக் காப்பாற்றும். ஆயினும் இதுபிடிவாத குணமுடையது

இதையறிந்துஒட்டைப்பாகர்கள் தங்கள்ஒட்டகைகள் தங்கள்மேற் கோபமாயிருக்கும் சமயத்தில் அவற்றிற்குத் தெரியாமல் தங்கள் வஸ்திரங்களை முட்புதரின்மேல் பரப்புவார்கள். இவ்வாறு தனது பாகனது வஸ்திரம் பரப்பப்பட் டிருப்பதைக்கண்டு தன்பாகன் தான் படுத்துக்கொண்டிருக்கிறான் என்று மிதித்துத்துவைத்துத் துணியைக் கிழித்துவிடும். இதனால் அதன்கோபம் சாந்தப்படும்; உடனே பாகன் எதிரில் வந்தாலும் ஒன்றும் செய்யாது.

பகுப்புகள்-ஒற்றை முசுப்புள்ளன, இரட்டை முசுப்புள்ளன.

ஆகாரம்-புல் தழைமுதலியன.

(வரும்.)

N. சுப்பிரமணி ஐயர்,

திருவேட்டீசுவரன் பேட்டை, சென்னை.

வல்லாள மஹாராஜன் சரித்திரம்.

(256-வது பக்கத்தின் தொடர்ச்சி).

புத்தெனும் நரகத்தினின்று மீட்பவனெனக் காரணப்பெயர் பெற்ற புத்திரனில்லாவிடின், புத்தெனும் நரகம் தானே யடையவேண்டும். இருபிறப்பாளர் மூவருக்கும் இயல்பாயிருக்கப்பட்ட கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும் தீர்க்க வென்னுலாகுமெனக் கருதுகின்றேன். ஆனால், தென்புலத்தார் கடனோ புதல்வரிலாப் பெருங்குறைவால் தீராதுபோகுமேயெனத் துன்புறவேண்டியவனாயிருக்கிறேன். வாழையடி வாழையெனத் தொடர்பாய் வந்த இவ்வம்சத் தொடர்பு ஒங்காது என்னோடுமுடிவு பெறும்போலும். யான் தென்திசை யோர்க்குக் கடனாளியாவன். என்பின்னர் இவ்வரசுக் கதிபதியாக எக் குடும்பத்தார் வருவரோ? அல்லது தலைவனில்லாது எவ்வாறு தலைதடுமாறுமோ? வரம் பழியுமோ? அந்தணரருமறை மறப்பரோ? ஆதரிப்பாரில்லாமையால் குடிகளின்குறை நீதியாய்த்தீர்ப்பாரின்றி இந்நாட்டுக்குடிகள் துன்புறுவரோ? முனிவர்கள் தங்கள் வேள்விக் குபகரணங்கள் கொடுப்பாரின்றித் தம்தம் நெறிநின்றுந் தவறுவரோ? இதனால் மாரிகுறைந்து வளங்குன்றி வையகம் பொலிவுரு தழியுமோ? அவாவுட னவிர்ப்பாகத்திற்கு எதிர்பார்க்கும் அண்டரெல்லாம் என்னுவரோ! பூஜையாதி நித்திய நைமித்தியகருமங்கள் நடவாது தேவாலய மெப்பாழ்படுமோ? இக்குறைகள் அணுகாவண்ணம் காப்பது மன்னனுயிற்றே; இதனாலன்றோ அரசன் காவலனெனும் காரணப்பேர் எற்கின்றனன். மேலும், வேனிற்காலத்தின் மேகம்போலும் மின்

னலின் மிச்சொளிபோலும் நிலையுள்ளது போற்றேன்றிக்கழிதிலழியத் தக்க வென் வாழ்நாளில் நானடைய வேண்டிய நற்கதியடைவதற்கு அறிய வேண்டுவனவற்றை யறிந்து செய்யவேண்டுவன வற்றைச் செய்ய யான் எனது பட்டத்தை விட்டுவிட்டு நீங்கியிருக்க, இளவரசபட்டம் பெற்றுள்ளோன் வேண்டுமே? புத்திரப்பேறு பெற்றாலன்றி இது முடியாதாகையால், புத்திரப்பேறவசியமாயிற்றே. "பெறுமவற்றுள் யாமறிவ தில்லையறிவறிந்த மக்கட்பே றல்லபிற" என வள்ளுவரிக் கருத்துக் கொண்டே கூறினர்போலும். "தொக்கிள மலர்துதைவி லாதசோலையும்,புக்கிளந்தாமரை நகாத பொய்கையும், மிக்கிளம்பிறைவி சும்பிலாதவந்தியும், மக்களு மிலாததோர் மனையுமொக்குமே" என முதியோருரைப்படி புத்திரனில்லாவிடத்து என்மனைப்பொலிவு குன்றுமே. மக்கள் மதலைச்சொற்கள் கேட்கப்பெறாச்செவிகளையும், அவராலாகிய யன்னச்சுவை யறியப்பெறா நாவையும், மக்கள்தழுவப் பெறா மெய்யையும் கண்ணில்லான் சுமந்த கண்ணாடிபோல் சுமந்துழல் கின்றேனெனத் துக்கித்து எண்ணங்கலங்கிச் சோர்ந்தான். இவ்வாறு துன்புற்றிருந்து ஒருநாள் தனக்கு மகவிலாக் காரணமும் மகவுண்டாகும் விதமும்தெரிந்துக் கொள்ளவேண்டுமெனத் துணிந்து நீதி நூல்களைக் கற்றுச்செய்வன தவிர்வனவறிந்து உண்மை யுறுதி தனக்குரைக்கு மமைச்சரைவரவழைத்து அரசிருக்கி இவைபுகல்வான். அறிவுள்ளவமைச்சர்காள்! அரசனென்னும் பேரொன்றேயெனக்கு இந்தவரசு என்னதல்ல வென்று கழறி, அகிலகாரியமும் நடாத்தி வுலகங்காத்தெனைக்காக்குங் கண்மணிகாள்! நானுரைக்கு முறை கேண்மின்! வீரமுள்ள சேனைபெற்றேன்; செல்வமுள்ளகுடிகள்பெற்றேன்; செவ்வியவின்னகராசும்பெற்றேன்; முன்னோர்போல் முறைதவறாதாள முயல்கின்றேன்; வல்லாளனெனும் பார்பரவிய புகழும் பெற்றேன். இப்புகழுக்கு வித்தா யுங்களையும் பெற்றேன்; ஆயினுமொரு குறையுளது. இவ்வரசுதாங்கி யெனை நற்கதி யடைவிக்கப் புத்திரப்பேறு பெற்றேனிலனே! "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற் றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற் புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய், மக்களையிங் கில்லாதவர்" எனுஞ் சான்றோர் வாக்குக் கிணங்க யிவையாவும் பெற்றேன்.

"அறிகொள் பொன்புனை கிண்கிணி தண்டையோ டணிந்த, தருண மென்றளிர்ச் சிற்றடித் தளர்நடைச் சிறுவர், மருவ ருதசெவ் வாம்பல்வாய் மழலையா ரமுதம், பருகி லாச்செவி பாவையின் செவியெனப் படுமால்" என்னுங் கூற்றுப்போல் மக்கள் மொழிகேளாச் செவிகளை மணமறியான் மலர் சுமந்தாற்போல் சுமந்துழல் கின்றனனே. அந்தோ, அருண்மகப்பேறு போன்று இம்மாநிதியம் இகபரதத்திற் கேதுவாகுமோ? புத்திரனின்மைக்குக் காரணம்யாதோ? செய்த பாவமேதோ? இப்போர்க்கியா தொழிந்தனனோ? ஈவோரைத் தடுத்தனனோ? அந்தணரையலறச் செய்தனனோ? அலறச்செய்தோர்க் கநுகூலஞ்செய்தனனோ? மாதர்மனமருளச் செய்தனனோ? தந்தைமொழி தவறினனோ? தாயுரை மறந்தனனோ? பொய்க்கரிபேசினனோ?

அதுபேசவிடந்தந் தனதுகருத்து யான்பெற அதன் உதவிபெற்றனனோ? ஆலயபூஜைக் கழிவுசெய்தனனோ? அது செய்யவுதவினனோ? தவமுடையாரைத் தவிக்கச்செய்தனனோ? அஃது செய்தாரோ டெனிருந்தனனோ? தஞ்சமெனவடைந்தோர்க்கபயங்கொடுத்திலனோ? என்னை யடைந்தோரை யலறச் செய்தனனோ? அது செய்வார் தன்புற விரும்பினனோ? நல்லார் மனம் நடுங்கவைத்தனனோ? பசித்தோர்க் கன்னங்கொடுத்திலனோ? நன்றியை மறந்தனனோ? குடிவரியுயர்த்தினனோ? வாய்மை யுரைத்திலனோ? கலவி புரிவோரைக் கலைத்தனனோ? கலைத்தாரோடிருக்க விரும்பினனோ? என்னபாவஞ் செய்தனனோ? எப்பாவத்தடையால் புத்திரப்பேறுபெற்றிலனோ? அறிகிலேன். உங்களுதவியானும் என்னறிவானும் இயன்றவரையில் குறைவின்றி ராஜகாரிய நடத்துவதானே முற்றுங் குற்றமற்றவனானேனெனச் சொல்லத்தகாதோ? எப்போதியற்றிய எக்குற்றத்தாலோ நம்பிறப்பு குறைக்கு உறைவிடமாயிற்று. இக்குறை எப்போது தீருமோ அறிகிலேன். என்னாலியற்றப்பட்டுத் திண்ணமாகச் சஞ்சிதமாகி என்னோடுதொடருகின்ற சிற்சில வினையின் நீக்கத்திற்கு எனது முயற்சியே வேண்டும்.

வேறுசிலவற்றின் கழிவிற்குஎனதுதொழில் அல்லது பத்தினி புத்திரர் முதலியோர் தொழிலுஞ்சாலும். இத்தகையை இவற்றிற்கு யான்முயலாது இச்சரீரத்தைவிட்டு பின்னர் இவை போக்கடிக்கக்கூடிய முயற்சி செய்யாதிருப்பின், இப்போது இச்சரீரசம்பந்தத்தாலுண்டாம்தனயன் உதவக்கூடும், அவ்வுதவிபெறவேண்டின், இப்போதுள இக்குறையின் நீக்கம் ஆவசியகமே. இவ்வாறுநடத்தி உதவிபுரியுமோர்நாதன்பெறும்பாக்கியம்கொண்டுளேன் அல்லேன். அமைச்சர்காள்! இப்பெருந்துக்கத்தால் பலநாள்மனநோந்தேன். இன்று உம்மிடம் வெளியிட்டேன்? என் கருத்தறிந்துள்ளீர். ஆதலின், நானுய்யும் நெறி தேடவேண்டியது உமது கடனன்றோ? உம்மால் கவனிக்கவேண்டிய விஷயம் யான் விரிவாய்பேச வேண்டியதில்லையே! நீவிர் ஆலோசிப்பீரென வல்லாளன் வாடின முகத்தனாய்ப் பேசினன்.

இவ்வாறு புத்திரனில்லாமையால் தனக்குண்டான சோகத்தை வெளியிட்ட அரசனதுரை கேட்ட அமைச்சர்வணங்கிச்சொல்வார். பொதுவிலையாயரசாளும் புண்ணிய பூபாலா! இவ்விஷயம் நாங்களே முயலுவதன்றித் தாங்கள் இன்னாள் துயருற்று அடியரேமை யழைப்பித்துத் தாங்களே திருவாய் மலரும் வரைக்கும் வாளாவிருந்த வெமது குற்றத்தை மன்னிக்கப் பிரார்த்தனை செய்கின்றோம். வல்லவரையும் நொடியில் வெல்லும் வல்லாள பூபதியே! இகபர போகங்கட்குத் தலைக்காரணம் புத்திரப்பேறென்பது வாய்மையே. இதுவே அறிவாளர் கருத்தும். தாங்கள் சொல்லவந்த பாபகாரணத்தால் மகப்பேறு தங்கட்கு வாய்த்திலதென்பது தங்கள் எண்ணம் போலும். ஆயினும், ஈண்டுக் குறித்த பாபங்களிலொன்றேனும் தாங்கள் இப்பிறப்பில் கனவிலும் நினைத்ததில்லை யென்பதற்கு ஐயஞ்சற்றுமில்லை. ஆயினும் முற்பவத்தீவினையேதோ இன்னதெனவறியவல்லேோம் அல்லோம். அஃதறியாது எப்பவத்திற் கென்ன பரிகாரஞ் செய்வது? அடைந்த பவமெவ்வாறு தேய்வது?

(வரும்).

ப. மு. கோகிலாம்பாள் அம்மாள்.

நீதிசதகம்.

(முன்தொடர்ச்சி).

13. (பிரஹ்மாவும் அவர்களுடைய பாண்டித்யத்தை அபகரிப்பதில் சக்தரன்று என்பதைத் திருஷ்டாந்தத்தினுல் காட்டுகிறுர்). பிரஹ்மதேவன் தனக்கு வாஹனமாயுள்ள அன்னத்தின் மீது கோபங்கொண்டால், அவ்வன்னத்தினது தாமரையோடையில் ஸஞ்சாரமாகிய விலாஸத்தை மாத்திரம் மிகவுங் கெடுக்க முடியுமேயன்றி எனைய அன்னங்களுக்குரிய ஜலத்தில் கலந்தபாலை மாத்திரம் கிரகிப்பதனு லுண்டான கீர்த்தியை யபகரிக்க ஸமர்த்தனன்று.

14. (வித்துவானுக்கு வித்தையே பூஷணமென்று கூறுகிறுர்). புருஷனைத் தோள்வளைகள் அலங்காரஞ் செய்ய மாட்டா; சந்திரஹாரங்களும் அலங்காரஞ் செய்ய மாட்டா; ஸ்நாநமும் அலங்காரஞ் செய்ய மாட்டாது; சந்தனக் குழம்பு முதலியவற்றின் பூச்சும் அலங்காரஞ் செய்ய மாட்டாது; அலங்காரஞ் செய்த குஞ்சுஞ் (தலைமயிரும்) சிறப்பினைச் செய்யாது. எந்தவாக்கானது வ்யாகரண முதலியவற்றுல் சுத்தமாக விருக்கிறதோ அந்தவாக் கொன்றே புருஷனை நன்றுக வலங்காரஞ் செய்கின்றது. எனைய ஆபரணங்களெல்லாம் நாசத்தை யடைகின்றன. வாக்கொன்றே யெப்போதும் அலங்காரமா யிருக்கின்றது.

15. (வித்தை ஸர்வோத்தம மாமென்று கூறுகிறுர்). மனிதனுக்கு வித்தையே அதிகமான ரூபம்; வித்தையே மறைந் திருக்கும் பொருள்; வித்தையே போகத்தை யுண்டுபண்ணுவது; கீர்த்தியை யுண்டுபண்ணுவது; சுகத்தைக் கொடுப்பது. வித்தையே குருக்களுக் கெல்லாம் குரு; வித்தையே தேசாந்தரஞ் சென்றபோது உறவினராக விருப்பது; வித்தையே உத்தமமான தேவதை; வித்தையே ராஜாக்களால் பூஜிக்கப்படுவது. அஃதன்றித் தனம் பூஜிக்கப் படமாட்டாது. ஆகையால், வித்தையற்றவன் பசுக் கொப்பாவன்.

16. தேஹிகளுக்கு (மனிதர்கட்கு)ப் பொறுமை யிருந்தால் கவசத்தால் யாது பிரயோஜனம்? கோப மிருந்தால் சத்ருக்களால் யாது பிரயோஜனம்? ஞாதி (துஷ்டர்களான பங்காளி)க ளிருந்தால் அக்னியால் யாது பிரயோஜனம்? சிநேகிதர்க ளிருந்தால் திவ்யமான ஔஷதங்களால் யாதுபிரயோஜனம்? துஷ்டர்க ளிருந்தால் சாபங்களால் யாது பிரயோ ஜனம்? குற்ற மற்ற வித்தை யிருந்தால் தனங்களால் யாது பிரயோ ஜனம்? (லஜ்ஜை) நாணமிருந்தால் ஆபரணங்களால் யாது பிரயோஜனம்? நல்ல கவித்வ மிருந்தால் ராஜ்யத்தால் யாது பிரயோஜனம்?

17. ஸ்வஜனங்க ளிடத்துத் தாக்ஷண்யமும், பரிஜன (வேலைக்கா ரனிட) னிடத்துத் தயையும், துஷ்டர்களிடத்து அப்பிரியமும், ஸாதுக்களிடத்துப் பிரீதியும், ராஜாக்களிடத்து நீதியும், வித்வான்க ளிடத்து ருஜுத்தன்மையும், சத்துருக்களிடதுச் சௌர்யமும், மாதாபிதாவினிடத்துப் பொறுமையும், பத்னியினிடத்துத் தைரியமும், சிற்பாதிகளில் ஸாமர்த்தியமு மாகிய விவை எவர்களுக்கு இருக்கின்றனவோ அவர்களிடத்திலேயே லோகஸ்திதி இருக்கிறது.

18. ஸாதுக்களின் ஸங்கதி புத்தியின் ஜாட்யத்தை யபகரிக்கின்றது; வாக்கில் ஸத்யத்தை யுண்டுபண்ணுகிறது; ஸம்மான விசேஷத்தைக் கொடுக்கிறது; பாபத்தையொழிக்கிறது; சித்தத்தைத் தெளியச் செய்கின்றது; திக்குகளில் கீர்த்தியை யுண்டுபண்ணுகிறது. இத்தகைய ஸத்ஸங்கதி புருஷனுக்கு இருந்தால் எதைத்தான் செய்ய மாட்டான். கூறுவாயாக.

(19) புண்யசாலிகளாயும் இரஸகுளிகையினால் வித்தர்களாயும் முள்ள கவீஸ்வரர்கள் ஸர்வோத்கிருஷ்டமாக விருக்கிறார்கள். அவர்களுடைய புகழுடம்பில் பிறப் பிறப்பா லுண்டாகும் பயம் சம்பவிப்பதில்லை.

ராமச்சந்திரசாஸ்திரியார்,
விஷ்ணுபுரம்.

பெண்கல்வி.

(248 வது பக்கத்தின் தொடர்ச்சி).

ஏனெனின், பெண்களிடத்திலுள்ள குணங்களுக்கும் ஆடவரிடத்திலுள்ள குணங்களுக்கும் மிக்க வித்தியாசமுண்டு. புருடர்களிடத்துள்ள குணங்களில் சில பெண்களுக்கு அநாவசியகமானவை. பெண்கள் மான்களைப் போல எப்போதும் எளிதில்பயப்படக் கூடியவர்கள்; நாணமுடையவர்கள்; இத்தகையகுணமுள்ளவர்கள் ஆடவர்களை யுபாத்தியாயராகக் கொள்ளின், அவ்விருவரும் தைலமும்ஜலமும்போல் வேறுபட்டேயிருப்பார்கள்; குணங்களில் ஒற்றுமைப்பட்டிருப்பதரிது. குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதுகல்விக்கென்றுகுறித்த நேரத்திற் கற்பிப்பதேயன்று; ஒவ்வொரு நிமிஷமும் போதிக்கும் நிமிஷமேயாகும்; ஒவ்வொரு காரியமும் போதனைக்குரியமுறையே யாகும்; ஆகையால், உபாத்தியாயர் கற்பவருடன் எப்போது மிருத்தல் அத்தியாவசியகமெனப் பெறப்பட்டது. உபாத்தியாயர் என்னும் பதவுரையைச் சற்று ஆராய்வாம். அத்தியாயர்-படிப்பவர்; உப-சமீபம். (கற்பவருடன் இருப்பவர்) என்று பொருள் படுகிறதாதலாற்றான் உபாத்தியாயர்கள் படிப்பவருடன் இருப்பது ஆவசியகமென முன்கூறப்பட்டது. நம்புராணேதிகாசங்களும் கற்பவர், குருகுலவாசம் செய்வதை (உபாத்தியாயர் வீட்டிலேயே

யிருப்பதை)ப் பற்றி சிலாக்கியமாகக் கூறுகின்றன. பெண்கள் குருகுலவாசம் செய்வது கூடாத காரிய மாதலின், பெண்களுக்கு உபாத்தியாயர் அவர் தம் வீட்டிலேயே யிருப்பது ஆவசியகமாம். வீட்டிலேயே யிருக்கும் உபாத்தியாயர் அவர்களின் தாயேயாவள். பாடசாலையில் பாடத்திற்கென்று குறித்த நேரத்திற் போதிக்கும் உபாத்தியாயரைவிடப் பிள்ளைகளுடன் எப்போது மிருக்கும் தாய் நூறுமடங்கு மேன்மையானவள். ஒவ்வொரு குழந்தையின் பிரதமகுரு அதனதன் தாயேயாவள். ஆதலால் ஒவ்வொரு குழந்தையின் தாயும் கற்றவளாயும் குணசீலியாயு மிருத்தல் இன்றியமையாதது. பெண்களுக்குக் கல்வி கற்பிக்கத் தாயே கற்றவளாயிருந்து அவளே உபாத்தியாயினியாயிருப்பது உத்தமம். இன்றேல், கற்றவளாயும் குணசீலியாயும் மிருக்கும் ஸ்திரீயை அவர்களுக்கு உபாத்தியாயினியாக ஏற்படுத்துவது நலம். எவ்விதத்திலும் ஆடவர்களைப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்படுத்துதல் நன்மையைத் தராதென்பது திண்ணம். ஆகவே, பெண்களுக்குக் கல்வி கற்பிக்க ஸ்திரீகளே தகுந்தவர்களென்பது பெறப்பட்டது. இஃது நிற்க, பாடசாலையிற் கற்பிப்பது நலமா? என்னும் விஷயங்களைப்பற்றி சற்றுச் சீர்தூக்குவாம் "பாடசாலையிற் கற்பிப்பது நலமா?" என்னும் விஷயத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு யோசிக்குங்கால், பாடசாலையிலிருக்கு மிடம் அப்பாடசாலையிற் படிக்கும் பெண்களின் பெற்றோர்களின் தொழில், குணகுணங்கள், அப்பாடசாலை வைக்கப்பட்டதன் நோக்கம், அதில் கற்பிக்கும் உபாத்தியாயரின் இலக்ஷணங்கள் முதலிய பல விஷயங்களையும் கவனித்தல் இன்றியமையாத தெனக் கீழ்வருவனவற்றால் விளங்கும்.

பாடசாலையி னிருப்பிடம்.—பனையின்கீழ் பாலைக்குடிக்கினும் அதைக் கள்ளென்று அநுமானிப்பது இடபேதத்தினாலன்றோ? ஸஜ்ஜன கோஷ்டியிலுள்ள துர்ஜ்ஜனனையும் ஸஜ்ஜனனாக அநுமானிப்பதும் அதனாலேயேயன்றோ? ஒவ்வொரு மனிதனுக் கிருப்பது போலவே ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு குணமுண்டு. ஒரு மனிதன் பலநாள் ஒரே இடத்தில் காணப்படுவானேயாயின், அவனிருக்கு மிடத்தின் முக்கியமான குணத்தை அவனுடையவனா யிருப்பானென்று அநுமானிப்பது வழக்கம். உதாரணமாக, ஒருவன் தாசித்தெருவில் பலநாள் காணப்பட்டால் அவன்ஜாரனென்றும், அடிக்கடி கோயில்களிலும் பகவத் கோஷ்டிகளிலும் காணப்படுபவன் பக்தனென்றும் ஊக்கிக்கப்படுகிறார்கள். ஆகவே, பாடசாலை யிருக்குமிடத்திற்கும் கற்கும் பெண்களுக்கும், நற்குணங்களைப் பழக்கக்கூடியவாறு அக்கம் பக்கங்களிலுள்ளவர்கள் உதாரணமாக எடுத்துரைக்கக் கூடிய அவ்வளவு நல்லகுணங்களை யுடையவர்களாக இருக்கவேண்டும். தெளிவாகக் கூறின், பாடசாலையானது வியபிசாரமே தொழிலாகவுடைய ஜாரிணி (தேவடியாள்) வீடுகள், சூதாடிகள், கட்குடியர், சோம்பேறிகள் முதலியவர் கூடும் சோம்பேறி மடங்கள் முதலியவற்றிற்கு அருகில் இருத்தல் கூடாது. நற்குண நற்செய்கைகளையுடைய இல்லங்களுக்கு அருகிலும், கோயில்களுக்

அருகிலும் பாடசாலைகள் கட்டப்படுவது நலம். தீயாரை அடிக்கடி பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் காண்பதும், அவர்பேசும் துர்ப்பாஷையை அடிக்கடி கேட்பதும், தீமையைத் தருமேயன்றி நன்மையைத்தரா. ஆகவே பாடசாலையானது சரியான இடத்தில் கட்டப்பட் டிருக்கின்றதா வென்பதைக் கவனித்தல் அத்தியாவசியகமாம்.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுரன் பேட்டை, சென்னை.

பூங்காவனம்.

இனிய கற்பனா சரித்திரம்.

முதலாம் அதிகாரம்.

சச்சிதாநந்த புரத்தைச் சார்ந்த வண்ணமாபுரியில் ஏறக்குறைய முப்பது வருடங்களுக்குமுன் அந்நாட்டுப் பிரபுக்களது விடா முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்ட "சைவகலாசாலை" என்னும் பெயரமைந்த ஓர் ஆங்கில வித்தியாசாலை யானது நாமகளிருப்பிட மென்று கண்டோர் கூறும்படி கிரித்தீபம்போல விளங்குகின்றது. இக்கலாசாலையானது அதிக விஸ்தீரணமுடையதாய் மேல்மெத்தைவைத்துக்கட்டப்பட்டு அதற்கு உப அங்கமான விடுதிச் சாலை சிலம்பச்சாலை முதலியவைகள் பொருந்தி உலகத்தில் இதற்கு உயர்வாக வேனும் ஒப்பாகவேனும் வேறொரு கலாசாலை இல்லையென்றே கூறும்படியாக விளங்கு கின்றது. இதில் மூவாயிரம் பிள்ளைகளுக்கு மேல் கல்விகற்று வருகிறார்கள். இக்கலாசாலையில் சிங்கைபுரஜமீன்தாரான மதிதயர் என்னும் மகாகௌரவம் பொருந்திய பிரபுவின் குமாரர்களான சிசுபாலன், அருட்பிரகாசம் என்னும் இருவாலிபர்கள் கல்வி கற்றுவருகிறார்கள். இவர்களில் இருபது வயதுடைய மூத்தகுமாரனாகிய சிசுபாலன் பீ. ஏ. பரீட்சைக்கும், பதினெட்டு வயதுடையவனாகிய அருட்பிரகாசம் பீ. ஏ., பி. எல். பரீக்ஷைக்கும் வாசித்துவருகின்றார்கள். இவர்களுள் முன்னோன் கல்வித்தாட்சி யுடையனாயும், பின்னோன் கல்வியுயர்ச்சி யுடையோனாயும் விளங்குவதற்குக் காரணம் யாதெனின், முன்னோன் கல்விகற்பதில் அற்பமேனும் விருப்ப மில்லாதவனாய்த் தந்தையின் கட்டாயத்தினால் வேண்டா வெறுப்பாகக் குங்குமஞ்சுமந்த கோவேறு கழுதைபோலப் புஸ்தகங்களைச்சுமந்து திரிந்து தன்னோடொத்த நண்பர்களுடனே கூடி விளையாடிவீண்பொழுதுபோக்கியும் சூது சதுரங்கம் முதலியவைகள் பயின்றும்

வந்ததினுற் கல்வித்தாட்சியும், பின்னேன் அங்ஙனமல்லாது தேடக்கிடையாத் அரிய கல்வியைக் கற்றுத் தான் ஒரு மனுஷனுக முன்னுக்கு வருதல் வேண்டு மென்னும் அவாவுடனும் சிரத்தையுடனும் அருமையான நேரத்தை வீண்போக்கிற் செல்ல விடாமையினுல் கல்வியுயர்ச்சியும் பெற்ருன். ஆனுல், கல்விகற்பதில் இருசகோதரரின் போக்கு வித்தியாசப் பட்டாலும் சகோதரபார்வையில் மாறுபாடின்றி ஒற்றுமை யுடையவர்களாகவே யிருந்தார்கள். பின்னேனுகிய அருட்பிரகாசம்கல்விகற்கும் நேரம் போக நாடோறும் பிற்பகலில் இரண்டு மணிநேரம் அக்கலாசாலைக்குப் பக்கத்தேயுள்ள மசாவல கங்கையென்னும் பெயருடைய ஆற்றிற் சென்று நீந்திவிளையாடியும் வங்கமேறிச் செலுத்தித் திரிந்தும் தேகாப்பியாசம் செய்து வருவான்.

1908ம்ஞு ஆடிமீ 24உ புதன் கிழமை இரவு ஆறுமணியளவில் வண்ணமாபுரியின் இரண்டாங் குறுக்குத் தெருவில் 142-ம் இலக்கவீட்டுச் சுமார் கால்மைல் தூரத்தில் ஏறக்குறைய பதினறு வயதுடைய வளும், பூரணச்சந்திரன் போன்ற முகத்தையும், சைவலத்தை யொத்தகூந்தலையும், மூன்ரும் பிறையை யொத்த நுதலையும், சேற்கெண்டை போன்ற புருவங்களையும், வேல்போன்ற கண்களையும், வள்ளையிலை போன்ற காதுகளையும், தரளம்போன்ற மூரல்களையும், பவளத்துண்டம் போன்ற அதரங்களையும், வெண் முத்துப் போன்ற பற்களையும், எட்பூப்போன்ற நாசியையும், கண்ணுடிபோன்ற கபோலங்களையும், வலம்புரிச் சங்குபோன்ற கழுத்தையும், மூங்கில்போன்ற தோள்களையும், கரும்பையொத்த முன்கைகளையும், தாமரை மலரையொத்த அங்கைகளையும், செவ்விள நீர்போன்ற தனங்களையும், ஆலிலைபோன்ற வயிற்றையும், உடுக்கையை நிகர்த்த இடையையும், செவ்வாளைபோன்ற குறங்கையும், அலவனை நிகர்த்த காற்சிப்பிகளையும், இளவரால்போன்ற கணுக்கால்களையும், படம்போன்ற பாதங்களையும், வட்டமதிபோன்ற நகங்களையும் உடையவளான ஒரு பெண்மணி இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க் நடந்து வரும் பொழுது, எதிர்முகமாகச் சிறிது தூரத்திற் சம்பாஷித்துக்கொண்டுவந்த இருதுஷ்டவாலிபர்கள் இப்பெண் மணியைக்கண்டு மதுவருந்திய மயக்கத்தானும் காமமயக்கத்தானும் அறிவு மயங்கித் தள்ளாடி வந்து இருவரும் அவளது இருகாத்தையும் பிடித்துக் கொண்டு தூக்கிக்கொண்டோடுதற்கு யத்தனித்தார்கள். அப்பொழுது யாத்திராப்பிரகாரம் அவ்வழியே வந்த அருட்பிரகாசம் நீதிக்கு விரோதமானதும் அடாப்பழியானதுமான இந்த நீசச் செய்கையைக்கண்டு வெஞ்சினநெருப்பு மூள அவ்விடத்திற் கோடி அவ்விருவருக்கும் ஒவ்வோரறை கொடுக்க அவர்கள் அறிவுமயங்கிக் கீழே வீழ்ந்து விட்டார்கள். அப்பொழுது பூங்காவனம் என்னும் பெயரையுடைய அப்பெண்மணி அறிவு மயங்கிக் கீழே சாய்திலும் அருட்பிரகாசம் அவள் வீழாதபடி தனது இருகாங்களிலும் தூக்கிக்கொண்டுபோய்ப் பக்கத்தேயுள்ள சத்திரத்துத் தெற்றியிற் படுக்கவைத்து, அங்கிருந்த ஒரு கிழவியிடம் தீர்த்தம்வாங்கி அவளது முகத்

திற் றெளித்து அறிவுவரப்பண்ணினன். சிறிது நேரஞ்சென்றபின் அவள் கண்விழித்து எழுந்து கை கூப்பி வணங்கி "ஐயா! பிரபுவே! தயவுசெய்து தாம் அதோதெரியும் எனது வீடுவரையில் துணையாகவருதல் வேண்டுமென்று பிரார்த்தித்தலும் அவன் உடன்பட்டு அப் பெண்மணியோடு சென்றான். அடிபட்டுக் கீழேவீழ்ந்து மயங்கிய துஷ்ட வாலிபர்க ளிருவரும் அறிவு தெளிந்தவுடன் தப்பினேம் என்று ஓட்டம் பிடித்தார்கள்.

நம்கதாநாயகியாகிய பூங்காவனத்தின் தந்தையாரின் பெயர் அருளாநந்த முதலியாராகும். இவர்சிலவருடங்களுக்குமுன் கண்டியென்னும் இடத்திலுள்ள போலீஸ்க்கண்டோரில் முதலாங் கிளர்க்காகவிருந்து உபகாரச் சம்பளம்பெற்று வசித்து வருநாளில் மணந்தநாயகி மறுவுலகம் நாடி விடத் தமது ஏகபுத்திரியுடன் குறித்த வண்ணமா புரிக்குவந்து ஓர்வீட்டை வாடகைக்கெடுத்து இரண்டொரு வேலைக்காரருடன் வசித்துவருகின்றார். இவர் இப்பொழுது எழுபது வயதுடையவரா யிருந்தாலும், வளர்ச்சியான இராச வம்சத் தோற்றத்தை யுடையவராயும், ஒடுங்கிய முகத்தையுடையவராயும் சிறியகண்களை யுடையவராயும், நற்சுபாவ முடையவராயும், ஆலோசனையுடையவராயு முள்ளவர். மேலே குறிக்கப்பட்ட அன்றிரவு ஒருசாய்வு நாற்காலியிற் சாய்ந்து கொண்டிருந்து சமாச்சாரப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த நமது அருளானந்த முதலியாருக்கு ஓர் எண்ணமுண்டாகத் அவர் திடீரெனப் பத்திரிகையை மேசைக்குமேல் வைத்துவிட்டு, ஏது எட்டுமணியாயிற்று, இன்னும் நமதுகுழந்தை பூங்காவனத்தைக்காணவில்லை; ஒருநாளும் இவ்வளவு நேரம்வரை தாமதித் திருக்கமாட்டாள்; என்ன ஆச்சரியமாக விருக்கின்றதெனத் தம்மோடுதாமே பேசிக்கொண்டு சாய்வு நாற்காலியினின்றும் எழுந்துவெளியே செல்லுவதற்கு யத்தனித்துவேலைக்காரனாகிய கோவிந்தன் என்பவனை அழைக்கும்போது அவன்முன்னேவர நடுவே பூங்காவனம் பஞ்சின் மெல்லடி பெயர்த்துவர அவளுக்குப்பின் அருட்பிரகாசம் என்னும் வாலிபனும் வந்தனன். பூங்காவனம் தந்தையாருக்குச் சமீபத்தில் வந்து அருட்பிரகாசத்தை அறிமுகப்படுத்தி "ஐயா" இந்தப்புருஷோத்தமர் இன்று இல்லாவிட்டால்என்மானத்துடன் உயிரும் போய்விடும் என்று நடந்த சம்பவங்களையெல்லாம் கூறினள். அப்பொழுது அருளாநந்தமுதலியார் ஆராமையோடு அவனைக் கட்டித்தழுவி "எனக்கு உயிர்ப்பிச்சைதந்த உத்தமனே! அருமருந்தே! கைம்மாறுகருதாது இன்றைக்கு நீர் செய்தஉபகாரத்தை மறவேன். கருணாநிதி! உமக்கு நீடித்த ஆயுளையும் அஷ்ட ஐஸ்வரியத்தையும் தருவார்" என்றுகூறி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். அப்பொழுது அவன் ஐயா பெரியவரே! உலகத்தில் ஒருவன் சாதாரணமாகச்செய்யவேண்டிய செய்கையைச் செய்தேனே யல்லாமல் விசேஷமாக ஒன்றையும் செய்யவில்லை. தாங்கள் என்னைப் புகழ்வது நீதியல்ல. நான் கலாசாலையில் விடுதிவிட்டுக்கல்விகற்பவனாதலினால், இங்கு நெடுநேரம் தாமதித்து நிற்கமுடியாது உத்தரவு தாருங்கள் எனலும் அப்பொழுது அவருக்குப் பக்கத்தேநிற்கும் பூங்காவனம் பெரியவருடைய

காதில் ஏதோ இரகசியமாகக்கூறுதலும் அவர் அருட்பிரகாசத்தைமீண்டும் கட்டித்தழுவி என் வாழ்வைத்தந்த அப்பனே! நீர்நாளைப்பிற்பகல் எங்கள் எழ்மையான இக்கிருகத்துக்கு வந்து விருந்தருந்துதல் வேண்டும்; இதை நானும் எனது புத்திரியும் அன்பாயும் நேசமாயும் கேட்கின்றோம் என்னலும், அவன் அங்ஙனமே உடன்பட்டு இருவரிடமும் உத்தரவு பெற்றுக் கொண்டு கலாசாலைக்குச் சென்றுவிட்டான்.

சிவாராமலிங்கம் பிள்ளை,
யாழ்ப்பாணம்.

வைத்தியம்.

1. தேகத்தின் தன்மை:—

இவ்வுலகின் கண் நம்மாற் காணப்படும் பொருள்கள் எல்லாவற்றினும் மிக விசித்திரமாயும் மனிதனறிவிற் கெட்டாததாயுமுள்ள ஒரு சிருஷ்டி விளங்குகின்றது. அது மனிதனின் தேகமே. இந்தத் தேகம் மற்றெல்லா உயிர்களின் தேகங்களைப் பார்க்கினும் வேறுவிதமாய்சிருஷ்டிக்கப்பட்டிருப்பதற்குக்காரணம்யாதென்றுராயின் அதன் உண்மை நன்குபுலப்படும். ஆனல் தற்சமயம் நமது உத்தேச மதுவல்லாததால் இத்தேகத்தின்விஷயங்களையே கவனிப்போம். இத்தேகத்தில் அதிக அழகான மெல்லியதோலும் உள்ளங்கை உள்ளங்கால் முதலிய இடங்களில் தடித்த தோலும் சிற்சில இடங்களில் உரோமங்களும் சிற்சில இடங்களில் மெலிந்து சுருங்கி நீளுந் தன்மையுடைய சதையும் தோள்முதலிய இடங்களில் கடினமாய்ப் பலப்பட்டசதையும் அவைகட்கிடையே ஓடும் மெல்லிய நரம்புகளும் உலர்ந்து சருகாகிய அரசிலையிற் காணப்படும் ஜல்லி வடிவமான மெல்லியநரம்புகளும் இவைகளின் கீழ்ப்பக்கத்தில் எலும்பினுற் கட்டப்பட்ட கட்டடமும் அதற்குள் இரத்தக்குழாய், தீனிப்பை, சுவாசாசயப்பை வாதபித்த சிலேஷ்மக் கூறுபாட்டின் பைகள் மலமூத்திரப்பைகள் ஆகிய இவைகளும் உண்டாயிருக்கின்றன. ஆகா இந்த இயற்கையை உற்று நோக்கின் அது எக்காலத்தும் மனிதனறிவிற் கெட்டாததேயாம். இதற்குள்ளிருந்து வேலைவாங்கும் எஜமானனொருவன் எவ்வித அளவைக்கும்எட்டாதவனுய் நாமரூபகிரியை யற்றவனுய் விளங்குகின்றான்,

2. நோய்க்குக் காரணம் :—

வாத பித்த சிலேஷ்மம் எனும் மூன்றின் மிகுதியல்லது குறைவினாலும், நாம்வசிக்கும் பிரதேசத்தின் சீதோஷ்ணஸ்திதியின் மாறுபாட்டினாலும், உணவின் மிகுதி குறைவினாலும் மாறுபாட்டினாலும் வாழ்க்கையில் யாமடையும் கஷ்டநஷ்டங்களாலுண்டாகும் மனக்கிலேசத்தாலும் தொத்துதலாலும் தேகத்தைத் தாங்க முடியாத சிரமத்திற்குள்ளாக்குவதாலும் அகால போஜனம் முதலிய தேகப் பழக்கங்களின் நிலை தவறுதலாலும் இன்னும் அநேகமான நமது பிழைமுதலிய காரணங்களாலும் தேகம் நோயடைகின்றது.

3. வைத்தியத்தினருமை. :—

தேகத்தின் கூறுபாட்டையும், அதன் நிலைமையையும், பலத்தையும்,வயதையும், அதில் குறைந்தோ அல்லது அதிகப்பட்டோ உள்ள சத்தையும் அறிந்து அதனைச் சரிப்படுத்தும் தன்மையே வைத்திய மெனப்படும்.

இதையறிதற்குப் பலநாள் கல்வி கேள்வியும் விடாமுயற்சியும் பழக்கமு மிருந்தாலன்றி முடியாது. இவ்வித்தை மிகவும் அருமையானதென்று எல்லாப் பாஷைகளிலும், உலகிலெல்லாப் பக்கங்களிலும் எல்லாராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. இவ்வித்தையை ஒவ்வொருவம் அறியவேண்டிய வராயிருக்கின்றார்.

நாகரிகமற்ற நாட்டுவாசிகள் கூட காய், கனி, கிழங்கு கீரைகளின் குணங்களை யறிந்து அவைகளை ஸமயோசிதமாய்ப் புசிப்பதனால் தத்தம் நோய்களை நீக்கிக் கொள்ளுகிறார்கள். இவ்வித்தை பெரும்பாலும் அனுபவ மிகுதியால் பெறவேண்டுவதா யிருக்கின்றது. நாடி, குரல், நா, நேத்திரம், மூத்திரம் முதலிய வைகளைப் பரீக்ஷித்து நோய் யாதென்ப தறிந்தும் அன்னோய் யாதுகாரணத்தால் வந்ததென்று ஊகித்தும் தாமூகித்த துணைமையோ வென்று தெரிந்து கொள்ளற் பொருட்டு அன்னோயாளியையே உசாவியும் இதற்கு எந்தவிதமான சிகிச்சை செய்யலாம் எந்தமருந்தைக் கொடுக்கலாம், எல்லாம் பொதுவான தமது அல்லது இன்னும் மேலோராகிய அறிஞரின் அநுபவங்களை உபயோகித்தும் "உற்றானளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச்செயல்" என்னும்

விதியை யனுசரித்தும் மருந்து கொடுப்பவனே வைத்தியனெனப் பெயர்பெறுவான். உலகிற் காணப்படும் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொருவடிவையும் ஒவ்வொருநிறத்தையும் ஒருவகைக் கனத்தையும் உடையதுபோலவே ஒருவகைச் சத்தையும் அதனாலாய குணத்தையும் உடையதா யிருக்கின்றது. எந்தத் தேகத்தில் எந்த நோய் எந்தச்சத்தின்குறைவால் உண்டாயது என்பதை யறிந்த மருத்துவப் புலவன் அந்தச் சத்தையும் அந்தக் குணத்தையும் உடைய பொருள் யாது என்றறிந்து அதனைப் பக்குவப்படுத்திக் கொடுத்து அந்நோயை நீக்குகின்றான். இதனால் வைத்தியன் ஒவ்வொரு பொருளின் குணத்தையும் அறியவேண்டிய தவசியம். நமது தேகத்திலுள்ள ஸமஸ்த பொறிகளையும் அவைகளின் பலா பலன்களையும் அவைகளின் நிலைமை முதலிய ஸமஸ்த விஷயங்களையும் அறியவேண்டிய தவசியம். முற்காலத்து நம்பெரியோர் தீயாலும் உருக்கப்படாத இரும்புமுதலிய பொருள்களையும், தீயிற் புகைந்தோடும்படியான இரசம்முதலிய பொருள்களையும், உயிரையே கொல்லும் பாஷாணம் முதலியவைகளையுங்கூடப் பக்குவஞ்செய்து நோயின் வலியையுமறிந்துகொடுத்து அநேக பெரிய வியாதிகளையெல்லாம் கண்டித்திருக்கின்றார்கள். வைர வைப்பென்றும், மரகத வைப்பென்றும், பாஷாணக் கட்டென்றும் இப்பொழுதும் கேள்விப் படுகிறோம். நன்றாய்த் தேர்ந்த வைத்தியன் ஒரு தேகத்திற்கு உயிர் ஒன்றைக் கொடுக்க முடியாதேதவிர, அவ்வுயிருள்ளவரையில் தேகத்திலுள்ளபிணிகளை நீக்கி, அதை ஆரோக்கிய திடகாத்ரதேகமாய்ச் செய்யலாம். எவ்வளவறிவுடையவனாய் உலகத்தையேமுற்றும் வெறுத்த முனிவனானாலும் தன் தேகத்தை வாட்டும் பிணியொன்று வந்தால் நெஞ்சம் கலங்குவான் எனின், சாதாரண மனிதர்களுக்குத் தேக தத்துவக் குறைவினா லுண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? ஆதலின், ஒவ்வொருவரும் தமது வீட்டைச் சுத்தமாய் வைத்துக் கொள்வது, நல்ல நீரருந்துவது முதலிய சுகாதாரத்திற்குரிய முறைகளையும், தேகத்தைப் பாதுகாக்கும் விதங்களையும், ஆகாராதிகளின் குணகுணங்களையும், சாதாரணமாய்த்தேகத்தை எவ்வண்ணம் சாமான்ய வியாதிகளினின்றும் நீக்கிக்கொள்ளலாமென்னும் நிமித்தம் சிலவியாதிகளைக் குறித்தமுக்கிய விஷயங்களையு மறிந்து பெரும்பான்மையும் வியாதிகளை விலக்கிக்கொள்ள

வேண்டிய அவசியம். வியாதிகள் வந்தபிறகு சிகிச்சை தேடுவதை விட வாராமுன் வரவொட்டாது தடுப்பதே மிகவும் நலம். தெய்வ வசத்தால் ஒரு வேளை நமது ஜாக்கிரதைகளையும் மீறி வியாதிவருமானால், அவைகளின் கூறுகளையறிந்திருப்போமாயின், பயப்படாது மருத்துவர்களைத்தேடவேண்டிய ஸமயங்களில்தேடி மற்றைக்காலங்களில் நாமே தக்க ஸாமான்ய சிகிச்சைகளைச் செய்து வியாதிகளை நீக்கிக் கொள்ளலாம். இவைகளின் முறை பின்வரும்.

(வரும்.)

அரங்காச்சாரியார்,

கிண்டர்கார்ட்டன் அல்லது பாலபோதனுமுறை.

கிண்டர்கார்ட்டன் முறையை அநுசரிக்க வேண்டிய வயது.

மேற்கூறிய வாறு பிள்ளைகளின் சுபாவ குணங்களான சுறுசுறுப்பு விளையாட்டு முதலியவைகளை விருத்தி செய்ய விளையாட்டோடு கூடிய பந்தயக் கணக்குகள், கதைகள், பாட்டுக்கள், சித்திரமெழுதல், வர்ணங் கொடுத்தல், களிமண்ணால் உருவங்கள் செய்தல் முதலிய பாடங்களைச் சாதனங்களாகக் கொள்ளுதல் அவசியம். பிள்ளைகள் தங்கள் வயது ஏற ஏறத் தங்கள் சரீரசுகத்தை அபேக்ஷித்துத் தாங்களே மருந்துசாப்பிடுவதுபோல் தங்கள் அறிவின் அபிவிருத்திக்குந் தாங்களே வாசிக்க முயலுவார்கள். இங்ஙனம் பிள்ளைகளே தங்கள் அறிவின் அபிவிர்த்தியைவிரும்பிப் படிப்பில் அவர்களுக்குச் சிரத்தை யுண்டாகும் வரையில் மேற்கூறிய கிண்டர் கார்ட்டன் முறையைச் சாதனமாக அநுஷ்டித்தல் இன்றியமையாததே.

கிண்டர் கார்ட்டன் உபாத்தியாயரின் பொது இலக்ஷணங்கள்.

(1) உபாத்தியாயர் பிள்ளைகளின் சுபாவ குணங்களை யறிந்தவரா யிருக்கவேண்டும்.

(2) கிண்டர் கார்ட்டன் உபாத்தியாயர் சிறுபிள்ளைகளோடு படிக்க வேண்டியிருப்பதால், அவர், அவர்களுக்கேற்றஎளியநடையிற்பேசித், தாமும் பிள்ளைகளிலொருவராக அவர்களால்எண்ணப்படுமாறு நடித்து அவர்களைச் சந்தோஷப்படும்படி செய்பவராகவுமிருக்கவேண்டும்.

(3) அவரிடத்தில் பொறுமை, விசுவாசம், நியாயம் முதலிய நற்குணங்கள் எப்போதுங் குடி கொண்டிருக்க வேண்டும்.

(4) அவர் தேகத்திலும் உடையிலும் மனத்திலும் செய்கையிலும் சுத்த முடையவராயும், கூடுமானவரையிற் பொய்சொல்லாதவராயும், கோபமற்றவராயும் இருப்பது அத்தியா வசியகம்.

கிண்டர் கார்ட்டன் பாடசாலையி னிருப்பிடம்.

சாதாரணமாகப் பாடசாலைகள் பிள்ளைகளின் வீடுகளுக்குச் சமீபத்திலேயே யிருக்கவேண்டு மென்றால், மூன்று நான்குவயதுள்ள சிசுக்களைத் தயாராக்கும் கிண்டர் கார்ட்டன் பாடசாலை அவர்களின் வீடுகளுக்குச் சமீபத்தில் இருக்க வேண்டு மென்று சொல்லுவதற்குத் தடையென்ன?

பிள்ளைகளின் குணங்களை யறியாது அவர்களுக்குக் கற்பிக்கு முபாத்தியாயர், வியாதி இன்னதென்று அறியாது மனம்போனவாறு மருந்துகொடுக்கும் வைத்தியருக்கொப்பாவர். இத்தகைய உபாத்தியாயர்கள் கற்பிக்கும் பிள்ளைகளிடத்தில் பிடிவாதம், கோபம், பொய், திருட்டுத்தனம் முதலியகுணங்கள் குடிகொள்ளும். இதற்குத் திண்ணைப் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் திருட்டுத்தனம் செய்தல், பெற்றோர் கேட்டால் பள்ளிக்கூடம் போனே னென்று பொய்சொல்லுதல், உபாத்தியாயர் தண்டித்தால் அவர்மீது கோபித்துச் சமயம்பார்த்து அவரைக் கல்லாலுங் கட்டியாலு மடித்துத் துன்பப்படுத்தல் முதலியனவே போதுமான சான்றும். ஆகையால், உபாத்திமைத் தொழிலைப் பூண்ட ஒவ்வொருவரும் தாங்கள்கற்பிக்கும் பிள்ளைகளின் குணங்களையும் அவர்களின் சாமர்த்தியத்தையும் அறிந்து அவற்றிற் கிணங்கப் போதிப்பது இன்றியமையாதது.

கிண்டர்கார்ட்டன் வகுப்பறைகளின் இலக்ஷணங்கள்.

(1) வகுப்பறைகளைப் போதுமான வெளிச்சமும் காற்றும் தாராளமாய் வரும்படி பலஜன்னல்கள் வைத்துச் சதுரமாகவாவது வட்டமாகவாவது ஏற்படுத்துவது நலம்.

(2) சுவர்களை நன்றாய் வெள்ளை யடித்துச் சுவரில் பல சித்திரப் படங்களையும் அழகான பொட்டகிருப்புகளையும் மாட்டி, வகுப்பறையைப் பார்வைக்கு மனோகரமா யிருக்கும்படி செய்ய வேண்டும்.

(3) வகுப்புறைகளின் நாற்சுவர்களும் பிள்ளைகளுக்கு எட்டுமளவு ஐந்து அல்லது ஆறு அடி வரையிலும் கறுப்புக்காரை பூசியிருப்பது நலம். இங்ஙனம் சுவர்களெல்லாம் கறுப்புப் பூசப்பட்டிருப்பதால், அவை கறுப்புப் பலகைகளுக்குப் பதிலாக உதவுகின்றன.

(வரும்).

N. சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர்கார்ட்டன் உபாத்தியாயர்.

உறுதி மொழிகள்.

(1) நம்மையும் உலகத்தையும் நாம் அறிதலே வித்தியாப் பியாசத்தின் முடிவு. இம்முடிவடை வதற்கு மார்க்கம் உலகத்தில் சொல்லப் படுவனவும் கருதப் படுவனவுமாகிய மிக மேலானவற்றை அறிதலேயாம். மாதியு ஆர்னல்ட் (Mathew Arnold).

(2) எல்லாக் காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் உள்ள கோயில்களும், பிரார்த்தனுமண்டபங்களும் தமது பெருமையாலும் சிறப்பாலும் மனிதனுக்கு ஈசுவரனைக் குறித்து நினைப்பு மூட்டல் ஆவசியகமென்பதைச் சாட்சிப் படுத்துகின்றன. சோபனேர் (Schopenher).

(3) நமக்கு வாய்க்கும் தண்டனை முதலியவெல்லாம் நமக்கு மோட்சத்தை யுத்தேசித்தே இறைவனால் (கடவுளால்) கொடுக்கப்படுகின்றன; ஆகையால் அவை நமக்கு ஏற்றன வாகின்றன. இவற்றையும் இவற்றைக் கொடுக்கும் தலைவனின் பெருமையையும் உத்தேசிக்கின், நமக்குக்கிடைக்கும் எதுவும் சிறியதாகாது. தாமஸ் அகெம்பிஸ் (Thomas-a-Kempis).

(4) கிரிக் தேசத்தியவர் மேலான ஞான மெனக் கொள்ளுவதும், இந்துதேசத்தவர் மேலான ஞானமெனக்கொள்ளுவதும், நம்மை நாமறிவதுவேயாம். மாக்ஸ் முல்லர் (Max Muller).

(5) இயற்கைத் தாவரங்கள் சுழுத்தி யவத்தையோடும், மிருகங்கள் சொப்பன வத்தையோடும், மனிதர்கள் சாக்கிராவத்தையோடு மிருக்கின்றன. ஷெல்லிங் (Schelling).

(6) கடவுளோடு ஜீவன் ஒன்றுகுவதால் அவன் பூரணத்துவமடைகின்றான். செயின்ட்தாமஸ்ஆக்குவினஸ்(Saint Thomas Acquinus).

(7) எவனுக்கு எல்லாப் பொருள்களும் ஒன்றாகவே யிருக்கின்றனவோ, எல்லாப் பொருள்களும் ஒன்றேயாகக் காணப்படுகின்றனவோ, ஒன்றிலே எல்லாம் காணப்படுகின்றனவோ, அவனே திடசித்தனாக விருக்கின்றான். அவனே கடவுளோடு சுகியாக வொன்றுபட் டிருக்கின்றான். தாமஸ் அகெம்பிஸ் (Thomas-a-Kempis).

(8) மானிட குணங்கள் மிகமேலானவையாகவும், ஈசுவரத் தன்மை யுடையன வாகவும் சாகும்வரையில் முயலவேண்டும். டென்னிசன் (Tenneyson).

(9) காதலனும் காதலியும் உண்மையில் ஒன்றே யாவர். பிராமணனும் அவனது உடம்பும் வெவ்வேறென்று அறிவிலிகள் கூறுவர். ஆக்பர் என்னும் மகம்மதிய அரசன் செய்த சட்ட நூலாகிய எயினிஆக்பரி (Aini Akbari).

வர் - ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

வர்த்தமானம்.

உலகத்தில் இப்போதுள்ள குபேரனும் அவனது தரித்திரமும்.

ஜான். டி. ராக்குபெல்லர் என்னும் ஒரு குபேரன் அமெரிக்காகண்டத்தில் இப்போது இருக்கின்றார். இவர் ஸ்டான்டர்ட் கிரிஸனயல் வியாபாரம்செய்வதனால் இவருக்கு "எண்ணெய்க் காரர்" என்று பெயர். இப்போது இவருடைய சொத்து 2700000000 (270 கோடி) ரூபாயாம். இவருக்கு வருடம் ஒன்றுக்கு எல்லா வகையாலும் வரும்வரும்படி 180000000 (18 கோடி) ரூபாய். அஃதாவது மாதம் ஒன்றுக்கு 15000000($1\frac{1}{2}$ கோடி) ரூபாய். அஃதாவது மணி ஒன்றுக்கு (420) ரூபாய்; அஃதாவது க்ஷணம் ஒன்றுக்கு 7 ரூபாய். ஆனால் இவருக்குப் புருவம் கண்ணிரப்பை முதலிய இடங்களில் ரோமமும் மீசையும் தாடியும் தலைமுதலிய சரீரத்தில் ஒரு ரோமமும்கிடையாவாம். ரோமத்தைநோக்கஇவர் மிகத்தரித்திரர். இதனாலே பெறப்படுவது துன்பத்துக்குக் காரணமான குறை இவரிடத்தில் இருந்தே தீருகிறதென்பது.

சத்சந்நியாசி இக்குறையைத் தனதாகக் கொள்ளாமையால், நித்திய சுகியா யிருக்கின்றான்; அவரொழிந்தார் துக்கசாகரத்தில் மொத்துண்டவதிப் படுகின்றனர்.

உயிருடன் புதைக்கப்பட்ட வொருகுழந்தை:—ஷோரனூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கும் பாரதப் புழையில் ஒரு மலையாள ஸ்திரீ ஸ்நானஞ் செய்திருந்தனள். அங்கிருந்த மணற் குவியலொன்று அசைவதைக் கண்டனள்; அருகிற்சென்று மணற்குவியலைச் சோதித்துப்பார்க்க, அங்கு இரண்டு வயதுள்ள குழந்தையொன்று உயிரோடிருக்கக் கண்டனள்; உடனே அவள் அக்குழந்தையை யெடுத்துப்போய் ஸ்நா

னஞ் செய்வித்தனள். குழந்தையைக் காப்பாற்றியதற்காக அவள் வெகுமதி பெற்றனள். போலீசார் குழந்தையின் தாய் இன்னாளென்று விசாரித்தனர், ஒரு செட்டி ஸ்திரீ தன் குழந்தையைக் காப்பாற்ற முடியாத காரணத்தினால் இங்ஙனஞ் செய்தனளென்று தெரிந்தது. என்னே கொடுமை!

வெகுகால பத்திரிகை:—சீனாவில் பீகிங் நியூஸ் என்னும் பத்திரிகை 1400 வருஷங்களாக நடைபெற்றுவருகின்றது. இதற்கிப்போதுள்ள சந்தாதார்கள் 10000 பேராம்.

புதுவகையான ஒரு மின்சார விளக்கு:—டாக்டர் டஸ்ஸாட் என்னும் ஒரு பிரான்சு மருத்துவர் சுரங்கங்களில் வேலைசெய்பவர்களுக்கு மிகவுமுபயோகமாமாறு ஒரு மின்சார விளக்கைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இது தொட்டால் சுடுவதில்லையாம்.

தந்தி—கம்பியில்லாத் தந்தி:—இந்தியாவில் தந்தியினுபயோகம் சுமார் 58 வருஷகாலமாக நடைபெற்றுவருகின்றது. சமீபகாலத்திற்குள் டில்லி, கல்கத்தா முதலிய நகரங்களில் கம்பியில்லாத் தந்திகள் உபயோகத்திற்கு வருமென்று தெரிகின்றது.

ஒருபெருங் குடியர்.—73-வயதளவிருந்து மாண்ட ஜர்மானியரொருவர் தமது தினசரிபுத்தகத்தில் 52-வருஷகாலத்தில் 625, 710. சுருட்டுப் பிடித்தேன் என்றும், 28,786-புட்டிப்பீரும், 36,095-புட்டிச் சாராயமும் குடித்தேனென்றும் எழுதியிருக்கின்றனர். இவர்க்குச் சுருட்டுபிடிப்பதும் சாராயம் குடிப்பதுமே வேலைபோலும்.

குகைவீடுகள்:—ஆப்பிரிக்காவில் கீப்ஸ் நகரமுதல் ட்யூனிஸ் நகரம் வரையுள்ள தேசத்திலிருக்கும் மட்பி னென்னும் ஜாதியார் பூமிக்குள் குகைபோன்று வீடுகள் கட்டி வசிக்கிறார்கள். அவ்வீடுகளுள் மெத்தை வீடுகளு முண்டாம்.

தற்சேயலாக வியாதியினின்றும் நீங்கினவள்:—லண்டனுக்கருகேயுள்ள ஹெர்னிஹில் என்னுமூரில் ஒருஸ்திரீ 5 வருஷகாலம் நோயாகப் பாயும் படுக்கையுமாகக் கிடந்தாள்; அதுபற்றி அவளதுகண் குருடுபட்டது; காதும் செவிடுபட்டது; ஒருநாளிரவு அவள் நிச்சயமாக இறந்துபோவாளென்று கருதப்பட்டது. அந்நாளிரவில் அவள் தற்செயலாகக் குருடும் செவிடும் நீங்கப்பெற்றுச் சுகமாக வுலாவினள். அவளிப்போது பூரணசுகத்தோ டிருக்கின்றாள்.

டிராம்வண்டியை முதல்முதல் கண்டுபிடித்தவர் இறந்துபோயினர்:—டிராம் வண்டியை முதல் முதல் கண்டுபிடித்த மிஸ்டர் W. L. P. ஆல் என்பவர் தமது 71-வது வயதில் பர்மிங்காமிற் கருகேயுள்ள ஆல்டனென்னுமூரில் இறந்துபோயினர்.

மிருந்தும், சோம்பித்திரிவதுவே பூஷணமென்று கருதியிருக்கும் பகுதியார் நிறைந்துள்ள இந்துதேசம் எங்ஙனம் மேல் நிலைமைக்கு வருதல் கூடும்! ஆரியர்களே! இனியேனும் நம் தூக்கத்தினின்றும் எழுமின்! விழிமின்!

S.P. A. நெல்லை-மாணிக்கவாசகன்.

P. S Sundram & Co. 162414

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பேனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150.	அரும்பு சிலங்கை கட்டிய	
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210.		

5 வருஷம் காரண்டியுள்ள	மல்லிகை ஒட்டியாணம்	ரூ. 25	8
	நாக ஒத்து பெரியது	12	0
	நாகஒத்து சிறியது	9	0
	காரை பெரியது	10	0
	காரை சிறியது	7	8
	வங்கி பெரியது	10	0
3 வருஷம் காரண்டியுள்ள	மல்லிகை ஒட்டியாணம்	19	8
	நாகஒத்து பெரியது	9	0
	ஷை சிறியது	6	12
	காரை பெரியது	7	8
	ஷை சிறியது	5	12
	வங்கி சிறியது	8	0
$1\frac{1}{2}$-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம்	... ...	13	8
மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது	... ...	8	8
ஜாமந்திப்பூ		1	8
ரோஜாப்பூ		1	8

170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோகியமும் நீடித்த சுகவாழ்வும்தரும் இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

சக்ரவர்த்தினி.

ஒரு வேண்டுகோள்.

இச்சஞ்சிகையுடன் இதற்கு ஏழாவதுவருடம் பூர்த்தியாகின்றது. அடுத்த சஞ்சிகை இம்மாதம் 15-ந் தேதிக்குள் வெளியாகும். அஃது எட்டாவது வருடத்தின் முதல்சஞ்சிகை யாம். ஒருவருடத்துச் சந்தாவைப் பத்திரிகாபிமானிகள் தயவுசெய்து முன்னரே அனுப்பி வைக்குமாறு வேண்டு கின்றோம். சந்தாதாரர்கள் அங்ஙனஞ் செய்து பத்திரிகையை யாதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வெட்டாவது வருடமுதல் சஞ்சிகை தருவிக்க இஷ்டமில்லாதவர்கள் முன்னரே தெரிவித்து விட்டால் எமக்குப் பொருள் நஷ்டமும் சிரமமுமில்லாமற்போம். ப - ர்.